www.padippakam.com

கடல்:4 அலை : 3 நன்கொடை ரூ.5/-

# தமிழ்த் தேசம்

திருவள்ளுவர் ஆண்டு 2032 ஆடவை - நளி கி.பி. 2001 சூன்-நவம்பர் ஆசிரியர் : தியாகு



## கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்!

தமிழ் தமிழர் இயக்கத் திங்களேடு தனிச்சுற்றுக்கு மட்டும்

படிப்பகம்

www.padippakam.com

# வீர வணக்கம் கர்னல் சங்கர்!



தமிழீழத்தின் இதயமாம் வன்னிப் பெரு நிலத்தில் பரந்தன் - முல்லைத்தீவு நெடுஞ்சாலையில் செப்டெம்பர் 26 ஆம் நாள் ஊர்தியில் பயணம் செய்து கொண்டிருந்தபோது மரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டு வெடித்து வீரச் சாவெய்தினார் கர்னல் சங்கர்.

சங்கர் ஏறத்தாழ இருபதாண்டுகளுக்கு மேல் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு நம்பிக்கைக்குரிய தோழராக இருந்தவர். அண்மையில் நடந்த சோல்கைம் சந்திப்பின்போதுகூட, அதில் பங்கெடுத்துக் கொண்ட சங்கர் மொழிபெயர்ப்பாளராகவும் செயல்பட்டார்.

1948 செப்டெம்பரில் பிறந்த சங்கர், வவுனியாவிலுள்ள தமிழ் மகா வித்யாலயத்திலும், பருத்தித்துறையிலுள்ள ஹார்ட்லே கல்லூரியிலும் கல்வி பயின்றவர்.

உடன் பிறந்த அறுவரில் மூத்தவர் மட்டுமே இங்கிலாந்தில் மருத்துவராகப் பணியாற்றுகிறார். மற்ற அனைவருமே புலிகளின் போராட்டத்தில் வீரச் சாய்வெய்தியவர்கள்.

பொட்டு அம்மனை 'ப்ளாட்' அமைப்பின் பிடியிலிருந்து துப்பாக்கி முனையில் மீட்டது இவரது வீரச் செயலுக்கோர் சான்று.

இவர் கடற்புலி பிரிவைத் தோற்றுவித்ததும், விமான எதிர்ப்புப் பிரிவை வளர்த்தெடுத்ததும் புலிகளின் விடுதலைப் போர் வரலாற்றில் மைல் கற்கள்!

அண்மையில் நடந்த கட்டுநாயகா வான் படைத் தள தாக்குதலைத் திட்டமிட்டு, நிறைவேற்றுவதில் அவர் முக்கியப் பங்காற்றினார்.

கர்னல் சங்கருக்கு தமிழ்த்தேசத்தின் வீரவணக்கம்!

# ஓ! மாவீரர்களே!

சாவு
என்னை எதிர்பார்த்திருக்கிறது
என்றான் கோழை
சாவை
நான் எதிர்பார்த்திருக்கிறேன்
என்றான் வீரன்.
ஓ! மாவீரர்களே!
நீங்கள் இரண்டாவது வகை.

மிதிபட்டுச் சாகிறேன்
புலம்பினான் கோழை
போராடிச் சாகிறேன்
உறுமினான் வீரன்.
ஓ! மாவீரர்களே!
நீங்கள் இரண்டாவது வகை.

போரில்
என் மக்கள் கொல்லப்படுகிறார்கள்
ஓலமிட்டான் கோழை.
போரில்
என் மக்களைக் கொன்றவர்கள்
கொல்லப்படுகிறார்கள்
எக்களித்தான் வீரன்.
ஓ! மாவீரர்களே!
நீங்கள் இரண்டாவது வகை.



கவிஞர் காசி ஆனந்தன்

காலம்
தமிழீழத்தை உருவாக்கும்
காத்திருந்தான் கோழை.
காலத்தை
நான் உருவாக்குவேன்
களமாடினான் வீரன்.
ஓ! மாவீரர்களே!
நீங்கள் இரண்டாவது வகை.

உயிர்வாழ
விரும்புகிறேன்
முனகினான் கோழை.
மானத்தோடு
உயிர்வாழ
விரும்புகிறேன்
முழங்கினான் வீரன்.
ஓ! மாவீரர்களே!
நீங்கள் இரண்டாவது வகை.

நெஞ்சின் நெருப்போடும்
விடிவின்
நினைவோடும்
நிமிர்வோடும்...
ஓ! மாவீரர்களே!
வரலாற்றில்
நீங்கள் முதல் இடத்தில்.

நவம்பர் 27
தமிழீழ மாவீரர் நாள்



படிப்பகம்

www.padippakam.com


# தமிழ்த் தேசம்

திருவள்ளுவர் ஆண்டு 2032 ஆடவை – நளி
கி.பி. 2001 சூன் - நவம்பர்
கடல் : 4
அலை : 3

எல்லாத் தொடர்புகளுக்கும் :
தமிழ்த் தேசம்,
4, சிறிராமுலு தெரு, வெங்கடாபுரம்,
அம்பத்தூர், சென்னை - 600 053.
தொலைபேசி : 6571395


ஆசிரியர் : தியாகு • வெளியிடுபவர் : ச. நாத்திக நந்தனார்


# அச்சம் தவிர்!

மீண்டும் ஓர் அடக்குமுறைச் சட்டம் பிறந்துள்ளது - பயங்கரவாதத் தடுப்பு அவசரச் சட்டம் - 2001 (பொடோ) என்ற பெயரில் ஒரு பயங்கரவாதச் சட்டம்!

1985 முதல் 1995 வரை செயல்பட்டு வந்த தடா சட்டத்தின் மறுபிறப்பே இந்த பொடோ! தடா சட்டத்தில் இல்லாத பல பிரிவுகள் பொடோவில் சேர்க்கப் பட்டுள்ளன. சட்டப்படி பயங்கரவாதம் என்றால் என்ன? என்று இலக்கணம் வகுக்காமலே பயங்கரவாதச் சட்டங்கள் வருகின்றன. இராசீவ் காந்தி கொலை வழக்கில் உச்ச நீதிமன் அளித்த தீர்ப்பை - இராசீவ் கொ ஒரு பயங்கரவாதச் செயல் என்ற தெளிவான முடிவை - அரசோ, சட்ட ஆணையமே கொண்டதாகத் தெரியவில்







தடா சட்டப்படி தொடரப்பட்ட வழக்குகளில் ஒரு விழுக்காடுதான் குற்றத் தீர்ப்பில் முடிந்துள்ளது. அதாவது பொய் வழக்குப் போட்டுத் தொல்லைப்படுத்துவதற்கே தடா சட்டம் பயன்பட்டுள்ளது. காவல் துறைக்கு வரம்பற்ற அதிகாரங்கள் வழங்கி, குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது குற்றமின்மையை மெய்ப்பித்துக் கொள்ளக் குறைந்தபட்ச வாய்ப்பு வழங்கியும்கூட இதுதான் நிலை! தடா எட்டடி பாய்ந்தால் பொடோ பதினாறடி பாய்கிறது.

பொடோ சட்டத்தின் படி பயங்கரவாதச் செயல் குறித்துத் தகவல் தராவிட்டால் குற்றம்! ஆள்காட்டிகள் மட்டுமே குற்றமற்றவர்கள்! இது கருத்துரிமைக்கும் பத்திரிகைச் சுதந்தரத்துக்கும் எதிரானது.

உள்துறை அமைச்சர் அத்வானி சொல்லிவிட்டார், பொடோவை எதிர்ப்பது பயங்கரவாதத்தை ஆதரிப்பதாம்! பயங்கரவாதத்தை ஆதரிப்பது பொடோ சட்டத்தின்படி குற்றம் ஆதலால், பொடோவை எதிர்ப்பதே ஒரு பயங்கரவாதக் குற்றம்தான்! பொடோவை எதிர்ப்பவர்களை பொடோ சட்டத்தில் சிறைப்படுத்தலாம்: இட்லரும் கோயபல்சும் சாகவில்லை. அவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

வாஜ்பேயாகவும் அத்வானியாகவும் இந்திய அவதாரம் எடுத்துள்ளார்கள்.

போலீஸ்காரர்கள் குற்றம் செய்தால் பொது மன்னிப்பு வழங்கப்படும் என்கிறார் அத்வானி! அவர்கள் மனித உரிமைகளை மீறுவது பற்றிக் கவலைப்படத் தேவையில்லையாம். பொடோ அவர்களைப் பாதுகாக்கும் என்று உறுதியளிக்கிறார் நாட்டின் உள்துறை அமைச்சர்.

பாசிச இந்துத்துவ வெறி கொண்ட அத்வானிகள் பொடோ போன்ற சட்டங்களை எப்படியெல்லாம் பயன்படுத்துவார்கள் என்பதை எளிதில் சொல்லி விடலாம். உழைக்கும் மக்களும் தலித்துகளும் ஒடுக்குண்ட பிரிவுகளும் தேசிய இன உரிமை கோருவோரும் மட்டுமல்ல, சிறுபான்மை மக்களும் பொடோவின் கொடுங்கையில் பிடித்துத் தரப் படுவார்கள்.

காவல்துறை என்பது சீருடை அணிந்த குற்றவாளிக் கும்பலாகவே சீரழிந்து விட்டதை அன்றாட நிகழ்ச்சி கள் மெய்''பித்து வருகின்றன. இப்படிப்பட்ட காக்கிக் குண்டர்களின் கையில் பொடோ கிடைத்தால் என்னாகும்?

பொடோ நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறுவது கடினமே எனப்படுகிறது. அதனால்தான் இதனை அவசரச் சட்டமாக்கி உடனே செயலாக்கத் தொடங்கிவிட்டனர். பொடோவின்படி தடை செய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியல் வெளியிடப் பட்டுள்ளது. இந்த அமைப்புகளில் தமிழீழ விடுதலைப் புலிகளும் அடக்கம் (பொடோவை ஆதரிக்கும் வைகோவுக்கு இது தெரியுமா?) இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கமும் (SIMI) தடை செய்யப்பட்டுள்ளது. தடைக்குச் சொல்லப்பட்டுள்ள காரணங்களின்படி பார்த்தால், ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங் தளம், விசுவ இந்து பரிஷத் போன்ற பார்ப்பனிய இந்துத்துவ அமைப்புகளை முதலில் தடை செய்ய வேண்டியிருக்கும்.




தடாவைக் கொண்டுவந்த காங்கிரஸ் பொடோவை எதிர்க்கிறது. தடாவை ஆதரித்த சி.பி.ஐ., சி.பி.எம். கட்சிகளும் பொடோவை எதிர்க்கின்றன. இந்தக் கட்சிகளின் எதிர்ப்பு கடைசிவரை நிலைக்கிறதா? பார்ப்போம். கருணாநிதியும் ஜெயலலிதாவும் வைகோவும் பொடோவைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார்கள்.

பொடோவின் நோக்கம் மக்களை அச்சுறுத்துவதே! மக்கள் இயக்கங்களை முடக்குவதே! பொடோவை விரட்டப் போராடுவது சனநாயக சக்திகளின் உடனடிக் கடமை! அச்சுறுத்தும் சட்டங்களை எதிர்த்துப் போராடுவோம்.

அச்சம் தவிர்! அச்சுறுத்தலை எதிர்! ■

## மணமக்கள் வாழ்க!

சென்ற ஆகஸ்டு 19ஆம் நாள் மதுரையில் தமிழ் தமிழர் இ[illegible]கத் தோழர் ச. இரவிச்சந்திரன் - இரா. ரேவதி ஆகியோரின் வாழ்க்கைத் துணை நல ஏற்பு விழா த.தே[illegible]ா.க. பொதுச் செயலாளர் தோழர் பெ. மணியரசன் தலைமையில் நடைபெற்றது. த.த.இ. பொதுச் செ[illegible]ாளர் தோழர் தியாகு முன்னிலை வகித்தார். இயக்கத் தோழர்களும் நண்பர்களும் பெருந்திரளாகக் [illegible]லந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். மணமக்கள் சார்பில் 'தமிழ்த் தேசம்' ஏட்டிற்கு ரூ. 500/- [illegible]கொடையாக வழங்கப்பட்டது.

சென்ற அக்டோபர் 21ஆம் நாள் இராசபாளையத்தில் தோழர் த. [illegible]ு - கு. சாந்தி ஆகியோரின் வாழ்க்கைத் துணை நல ஏற்பு விழா தமிழர் தேசிய இயக்கத் தலைவர் [illegible]ழ. நெடுமாறன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் தியாகு முன்னிலை வகித்தார். மண[illegible] சார்பில் 'தமிழ்த் தேசம்' ஏட்டிற்கு ரூ. 500/- நன்கொடையாக வழங்கப்பட்டது.

வாழ்க மணமக்கள்!

## நன்றியுடன் வாழ்த்துகிறோம்!

ஓசூரிலிருந்து அன்புச் செல்வங்கள் நிகரன், மெய்யறிவு, சுடர்விழி ஆகியோர் ஒவ்வொருவரும் ரூ. 100 வீதம் மொத்தம் ரூ. 300 'தமிழ்த் தேச'த்திற்கு நன்கொடையாக அனுப்பியுள்ளனர். மிக்க நன்றி!




படிப்பகம்

www.padippakam.com

# கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்!

■ தியாகு





"உன் தலையில் இடி விழ!" என்று சாவமிடக் கேட்டிருக்கிறோம். மெய்யாகவே அமெரிக்காவின் தலையில் இடி விழுந்த போது அந்நாட்டுடன் சேர்ந்து உலகமே அதிர்ந்து போயிற்று.

நீலவானிலிருந்து நேராய் வந்து நியூயார்க் நகரத்தின் நெடிதுயர்ந்த இரட்டைக் கோபுரங்களாம் உலக வர்த்தக மையக் கட்டடங்களைப் பயண வானூர்திகள் 'இடி'த்துப் புகையும் புழுதியும் பரத்திய காட்சி கனவா? அல்லது நனவா? மூன்றாம் வானூர்தி தலைநகர் வாஷிங்டனில் அமெரிக்கப் பாதுகாப்புத் துறைத் தலைமையகமான 'பெண்டகன்' என்னும் ஐங்கோணக் கட்டடத்தைத் தாக்கியது. நான்காம் வானூர்தி 'இலக்கு'த் தவறி விழுந்து நொறுங்கிப் போயிற்று. இலக்கு என்பது அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையோ, அமெரிக்க நாடாளுமன்றக் கட்டடம் ஆகிய கேபிட்டல் ஹில்லோ, வேறொன்றோ தெரியவில்லை.

இந்தத் தாக்குதல்களின் விளைவாக நியூயார்க் இரட்டைக் கோபுரங்களில் அதிர்ந்தும் எரிந்தும் நசுங்கியும் நொறுங்கியும் விழுந்தும் புதைந்தும் உதிர்ந்த மனித உயிர்கள் ஏழாயிரம் இருக்கலாம். பெண்டகனில் 860 பேர் கொல்லப்பட்டதாகக் கணக்கு. நான்கு வானூர்திகளின் பயணிகள் மற்றும் பணியாளர்களின் தொகையையும் இந்தச் சாவுக்கணக்கில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவசரமாய் ஓடோடி வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த போதே கட்டடம் தகர்ந்து விழுந்ததால் உயிரிழந்த தீயணைப்புப் படையினர், காவல் துறையினர் சுமார் 400 பேர். திட்டமிட்டு வானூர்திகளைக் கடத்திச் சென்று தாக்குதல் நடத்திய தற்கொலைப் படையினரை விலக்கிப் பார்த்தால், உயிரிழந்த அனைவரும் அப்பாவிகளே! பெரிய அளவில் பொருளிழப்பும் ஏற்பட்டிருந்தாலும்



படிப்பகம்

www.padippakam.com

## இரட்டைக் கோபுரங்கள்

உலக வர்த்தக மையம் நியூயார்க்கின் மன்ஹாட்டன் தீவில் அமைந்துள்ளது. இரட்டைக் கோபுரங்களைக் கட்டியது நியூயார்க் மற்றும் நியூஜெர்சி துறைமுக ஆணையம். 1966இல் கட்டத் தொடங்கி 1973இல் நாட்டுக்கு அர்ப்பணித்தனர். 110 மாடிகள் கொண்ட இரட்டைக் கோபுரங்கள் அய்ந்து ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருந்தன. ஒவ்வொரு தளமுமே ஓர் ஏக்கரில் அமைந்திருந்தது. இக் கோபுரங்கள் கால் மைல் தொலைவுக்கு வானில் மேலெழும்பின. 107ஆவது தளம் பார்வையாளர்களுக்கானது. இந்தத் தளத்திலிருந்தும், உச்சியில் மொட்டைமாடியிலிருந்தும்கூட வேடிக்கை பார்க்கலாம். நெடிதுயர்ந்து நிற்கும் கட்டடங்களையும் ஒட்டிய தீவில் பேரழகுடன் காட்சியளிக்கும் சுதந்தர தேவிச் சிலையையும் கதிரவன் எழுந்து மறைவதையும் இரவு முழு நிலவோடு ஒளி வெள்ளத்தில் மூழ்கிய நகரத்தையும் கண்டு மகிழலாம்.

உயிரிழப்புடன் ஒப்புநோக்கின் அது குறித்துப் பெரிதாய்ச் சொல்ல ஒன்றுமில்லை. பொதுமக்களின் மனத்தில் இந்தத் தாக்குதல் விதைத்துள்ள பேரச்சத்தைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. தாக்குதல் நடந்த ஒரு வாரத்தில், வானூர்தித் தொழிலில் மட்டும் 1,16,000 பேர் வேலையிழந்தனர் என்பதை ஓர் அளவுகோலாகக் கருதலாம்.

பயண வானூர்திகளைக் கடத்திச் சென்று பயணிகளையும் பணியாளர்களையும் பிணைக் கைதிகளாக்கிக் கோரிக்கை வைப்பதையே ஏற்பதற்கில்லை என்னும் போது, வானூர்திகளைப் பயணிகளோடு கொண்டு போய் மோதித் தாக்கியது கண்டிக்கத்தக்க பயங்கரவாதம்தான்! 'பெண்டகன்' அமெரிக்கப் பாதுகாப்புத் துறையின் தலைமையகம் என்ற முறையில் ஒரு போரிலக்கே என்றாலும், அதன் மீதான தாக்குதலுக்கு எந்தப் போரியல் நோக்கமும் இல்லை. இரட்டைக் கோபுரங்கள் அமெரிக்கப் பொருள் வலிமைக்கு அடையாளங்களாகக் கருதப்பட்ட போதிலும் அவற்றைப் போரிலக்குகளாகக் கொள்வதற்கில்லை. அவை அனேக நிதி நிறுவனங்களுக்கும் வணிக நிறுவனங்களுக்கும் அலுவலகமாய் பயன்பட்டதோடு, மிகப் பெரும் சுற்றுலாத் தலமாகவும் இருந்தன. அலுவலகங்களிலும் கடைகளிலும் பணி செய்த 50,000க்கு மேற்பட்டவர்கள் தவிர, ஒரு நாளைக்கு 1,50,000 பேர் வரை அங்கு சென்று சுற்றிக் காண்பதும், 110ஆம் மாடிக்குச் சென்று கீழே விரிந்து பரவும் கண்கொள்ளாக் காட்சியைப் பார்த்து மகிழ்வதும் உண்டு. இந்தச் சுற்றுலாப் பயணிகளிலும் சரி, அலுவலகங்களில் பணியாற்றியவர்களிலும் சரி, உலகின் பல நாட்டவரும் இருந்தனர். அத்தனைப் பேருமே அமெரிக்கர்கள் என்று வைத்துக் கொண்டாலும் கூட அவர்களை இப்படிச் சாகடிப்பது கொடுஞ்செயலே!

அமெரிக்க வல்லாதிக்கத்தையும் அமெரிக்கத் தேசம் அல்லது அமெரிக்க மக்களையும் ஒன்றாகவே சேர்த்துப் பார்ப்பது கூடாது. செப்டம்பர் 11 தாக்குதல்கள் அமெரிக்கத் தேசத்துக்கு நேரிட்டுள்ள பெருந்துயர் என்பதில் ஐயமில்லை. நியூயார்க் இரட்டைக் கோபுரங்கள் அமெரிக்கப் பொருள் வலிமைக்குரிய அடையாளம் மட்டுமன்று. கட்டடக் கலையின் அந்த அற்புதப் படைப்புகளை மனித குலத்தின் அறிவியல் சாதனைகளாகவும் கருத வேண்டும்.

### கொடுஞ்செயல்

செப்டம்பர் 11ஆம் நாள் அமெரிக்காவின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் எவராயினும், தாக்குதலின் நோக்கம் என்னவாயினும், அது பயங்கரவாதக் கொடுஞ்செயலே! ஏதோ இலட்சியத்தை அடைவதற்காக அப்பாவி மக்களைச் சாகடிக்கத்தான் வேண்டுமென்றால், அந்த இலட்சியத்திலேயே குறைபாடு இருக்க வேண்டும். அப்பாவி மக்களைக் கருவியாகவோ கேடயமாகவோ இலக்காகவோ கொண்டு நடத்தப்படும் எந்தத் தாக்குதலுக்கும் உண்மையான புரட்சிக்காரரின், விடுதலை வீரரின் அகராதியில் இடமே இல்லை.

அமெரிக்க வல்லாதிக்கத்தை எதிர்த்துப் பல்லாண்டு காலம் போராடிய வியத்நாம், கொரியா போன்ற நாடுகளின் விடுதலை இயக்கங்கள் எத்துணை மோசமான ஆத்திரமூட்டலுக்கு இடையிலும் பயங்கரவாதச் செயல்களில் ஒருபோதும் ஈடுபட்டதில்லை. பாலத்தீன மக்கள் மீதான இஸ்ரேலியப் பயங்கரவாத அடக்குமுறையின் எதிர்விளைவாகச் சில பயங்கரவாதத் தாக்குதல்கள் நடைபெற்றதும் இன்றளவும் நடைபெற்று வருவதும் உண்டென்றாலும் பாலத்தீன விடுதலை அமைப்பு இந்தத் தாக்குதல்களை ஏற்காததோடு கண்டித்தும் வந்துள்ளது.

சென்ற ஜூலை 23ஆம் நாள் கொழும்பு கட்டுநாயகா வான்படைத் தளத்தின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலை நினைவுபடுத்திப் பாருங்கள். அப்பாவிப் பொதுமக்கள் யாருக்கும் எவ்விதத் தீங்கும் ஏற்படக் கூடாது என்ற கவனத்துடன் புலிகள் அந்தத் தாக்குதலை நடத்தி முடித்தார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. இது ஒரு விடுதலை இயக்கத்தின் பொறுப்புணர்வுக்குச் சான்று. மேலும் கட்டுநாயகா வான்படைத் தளத்தின் மீதான தாக்குதலுக்குத் தெளிவான போரியல் நோக்கம் இருந்தது: யாழ்ப்பாணத்தின் மீதும் ஏனைய தமிழீழப் பகுதிகள் மீதும் குண்டு மழை பொழிந்து மக்களுக்குப் பேரழிவு உண்டாக்கும் போர் வானூர்திகளையும், பகைவரின் போர் நடவடிக்கைகளுக்குப் பயன்படும் ஏனைய வானூர்திகளையும் அழிக்க வேண்டும்! செப்டம்பர் 11ஆம் நாள்




படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்கா மீது தாக்குதல் நடத்திய வர்களுக்கு ஆயிரக்கணக்கான மனித உயிர்கள் அழிவது பற்றிக் கவலை இல்லை என்பதோடு, இயன்ற வரை அதிகமானவர்களைச் சாகடிப்பதே குறி. இதிலிருந்து விடுதலை வீரர் களுக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையிலான வேறுபாட்டை உணரலாம்.

ஜூலை 23 கொழும்புத் தாக்குதலையும் செப்டம்பர் 11 அமெரிக்கா மீதான தாக்குதலையும் தற்கொலைப் படையினர் நிறை வேற்றினர் என்பதாலேயே இரண்டும் ஒன்றாக மாட்டா. தமிழீழ விடுதலைப் போரில் பயன்படுத்தப்படும் அளவுக்கு இல்லையென்றாலும், வியத்நாம் விடுதலைப் போரிலும் கூட தற்கொலைப் படைத் தாக்குதல் முறை கையாளப்பட்டது. இந்தத் தாக்குதல் முறை ஒன்றை மட்டும் காரணமாகக் கொண்டு, எல்லாமே பயங்கரவாதச் செயல்கள் என்றும், எல்லாருமே பயங்கரவாதிகள் என்றும் முத்திரை

## கனவா? அல்லது நனவா?



குத்துவதை ஏற்கவியலாது. 'சன்' தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் சந்தடி சாக்கில் பயங்கரவாத இயக்கங் களின் பட்டியலில் விடுதலைப் புலி களையும் சேர்த்துச் சொல்வதையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை ஒசாமா பின் லாடன் முதலானவர்களோடு வரிசைப்படுத்துவதையும் மோசடி என்றுதான் சொல்ல வேண்டும்.

பாலத்தீன விடுதலைக்காகப் போராடும் இஸ்லாமியச் சமர் இயக்கத்தின் ('ஹாமாஸ்') ஆன்மிகத் தலைவரான ஷேக் அகமது யாசின் அண்மையில் ஒரு பேட்டியில் இப்படிச் சொன்னார் : ''எமது இயக்கம் இஸ்ரேலிய இலக்குகளை எதிர்த்துத் தற்கொலைத் தாக்குதல் நடத்துவது நியாயமானது. ஏனென் றால் நாங்கள் காலனியாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டிருக் கிறோம். மறுபுறம், அமெரிக்காவில் தாக்குதல் நடத்தியவர்கள் எந்தக் குறிக்கோளுக்காகவும் அப்படிச் செய்யவில்லை. ஆகவே அவர்களின் செயல்கள் சமயப் புறம்பானவை.''

தற்கொலைத் தாக்குதல் என்பது ஒரு போர் முறை - அதனை விடுதலைப் போராளிகளும் பயன்படுத்தலாம், பயங்கரவாதிகளும் பயன்படுத்த லாம். தாக்கப்படுவது யார்? தாக்குதலின் குறிக்கோள் என்ன? என்பவற்றைப் பொறுத்தே அச் செயலின் தன்மை தீர்மானிக்கப்படும்.

அமெரிக்காவின் மீது நடத்தப் பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் குற்றச் செயல்களே! குற்றம் செய்தவர் கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டியதே! தேச, சர்வதேசச் சட்டங்கள், சட்ட நிறுவனங்களின் துணை கொண்டு அமெரிக்க அரசு இதற்கான முயற்சி களைச் செய்யத் தடை ஒன்றுமில்லை. மறுபக்கம், பயங்கரவாதத்தின் மூல காரணங்களைக் கண்டறிந்து களைவதற்கான முயற்சிகளில் அனைவரும் ஈடுபட வேண்டும்.

### சான்று எங்கே?

ஆனால் அமெரிக்க அரசு செய்தது என்ன? தாக்குதல் நடைபெற்ற மறு நாளே, ஒசாமா பின் லாடன் மீதுதான் சந்தேகம் என்று வெளிப்படையாக அறிவித்தது. பயங்கரவாதக் குற்றவாளிகளைப் பிடித்துக் குற்றஞ்சாட்டுவதோடு, பயங்கரவாதி களின் புகலிடங்களை ஒழிப்போம், ஆதரவு வழிகளை அழிப்போம், பயங்கரவாதத்துக்கு ஊக்கமளிக்கும் அரசுகளை முடிப்போம் என்றெல் லாம் ஆவேச அறிவிப்புச் செய்தது. ஐக்கிய நாடுகள் அமைப்பு, அதன் சாசனம், அதன் பாதுகாப்பு மன்றம், பன்னாட்டு உடன்படிக்கைகள், உலக நீதிமன்றம்... எது குறித்தும் அமெரிக்க அரசு பேசவேயில்லை. குற்றவாளி களை வேட்டையாடுவது, புகை போட்டுப் பிடிப்பது பற்றியெல்லாம் அதிபர் புஷ் கொக்கரிக்கத் தொடங்கி விட்டார்.

செப்டம்பர் 11 தாக்குதல் அறுபதாண்டு முன்பு (1941 திசம்பர்) முத்துத் துறை முகத்தை (பெர்ல் ஹார்பர்) ஜப்பானியர் தாக்கியதை அமெரிக்கர்களுக்கு நினைவுபடுத்தி யது. அமெரிக்கப் பெருநிலத்தி லிருந்து தொலைவிலிருந்தாலும் அந்நாட்டின் பகுதியான ஹவாய்த் தீவில் நடைபெற்ற அந்தத் திடீர் தாக்குதலுக்குப் பின் இப்போதுதான் மீண்டும் அமெரிக்க மண்ணில் ஒரு 'போர்' நிகழ்ந்துள்ளது எனலாம். அப்போதைய அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட் ஜப்பான் மீது போர்ப் பிரகடனம் செய்த அதே தொனியில் இப்போது புஷ் பயங்கரவாதத்தின் மீது போர்ப் பிரகடனம் செய்துள்ளார்.

ஆனால் அன்று ஜப்பானின் பங்கு பற்றி யாருக்கும் எவ்வித ஐயமும் இல்லை. அது ஓர் அரசின் போர்



படிப்பகம்

www.padippakam.com

நடவடிக்கை. இப்போது நடந்திருப்பதோ தனிமனிதப் பயங்கர வாதத்தின், அல்லது ஒரு பயங்கரவாத இயக்கத்தின் தாக்குதல். இதற்காக யார் மீது குற்றஞ்சாட்டுவதாக இருந்தாலும் தக்கச் சான்றுகள் வேண்டும். குற்றவாளிகளைப் பாதுகாக்கும் அரசுகள் இருக்குமானால், அவற்றின் மீதும் சட்டநெறிப்படித்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிச் செய்யாமல் அமெரிக்க அரசு மனம் போன போக்கில் பயங்கரவாதிகள், பயங்கரவாத இயக்கங்கள், பயங்கரவாத அரசுகள் என்று முத்திரை குத்தி நடவடிக்கை எடுக்குமானால், அது தன்னைத் தானே உலகப் போலீசாக எண்ணிச் செயல்படுவதாகப் பொருள்.

ஒசாமா பின் லாடன்தான் செப்டெம்பர் 11 தாக்குதல்களைத் திட்டமிட்டு நடத்தினார் என்பதற்கு அமெரிக்க அரசு இதுவரை வெளிப்படையாக எந்தச் சான்றும் காட்டவில்லை. அமெரிக்க அரசிடம் சான்று இருப்பதாகவும் அது தங்களுக்குக் காட்டப்பட்டதாகவும் சொல்லியிருப்பவர்கள் பிரிட்டானியப் பிரதமர் டோனி பிளேர், பாகிஸ்தான் அதிபர் முசாரப், இந்திய அயலுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங் முதலானவர்களே. இவர்களும் அந்தச் சான்று என்னவென்று வெளியில் சொல்லவில்லை. இந்திய உள்துறை அமைச்சர் அத்வானி இவர்களை எல்லாம் தூக்கிச் சாப்பிடுவது போல் சொன்னார்: ''டோனி பிளேர் போன்ற ஒருவர் சான்றிருப்பதாகச் சொல்லும் போது அதை நம்பாமலிருக்கக் காரணம் ஒன்றுமில்லை.''

இராம ஜென்ம பூமியை நம்புவது போலவே டோனி பிளேரையும் அவர் சொல்லும் சான்றையும் அத்வானி நம்பிக் கொள்ளட்டும். ஆனால் இந்த நம்பிக்கையின் அடிப்படையில் பிறிதொரு தேசத்தின் மீது போர் தொடுக்க ஆதரவும் ஒத்துழைப்பும் கொடுப்பது நியாயம்தானா? மசூதியை இடித்துத் தரைமட்டமாக்குவதானாலும், ஒரு நாட்டையே நொறுக்கிப் புழுதியாக்குவதற்குத் துணை செய்வதானாலும் அத்வானிக்கு நம்பிக்கையே போதும் போலும்.

போகட்டும். செப்டம்பர் 11 தாக்குதலை ஒசாமா பின் லாடன் வரவேற்றுள்ள போதிலும், அதில் தனக்குத் தொடர்பில்லை என்று மறுத்துள்ளார். புஷ், பிளேர் முதலானவர்களை நம்பலாம் என்றால், ஒசாமாவை நம்பாமலிருக்கவும் காரணம் ஒன்றுமில்லை. அத்வானி வகையறாவுக்கு புஷ்ஷும் பிளேரும் நம்பிக்கைக்குரியவர்கள் என்றால், நமக்கு ஒப்பளவில் ஒசாமா கூடுதல் நம்பிக்கைக்குரியவராக இருக்கக் கூடாதா, என்ன? ஒருவர் ஒரு செயலை வரவேற்பதே அவர் அதைச் செய்ததற்குச் சான்று என்றால் ஒசாமாவோடு சேர்த்து இலட்சக் கணக்கானவர்களைக் கூண்டிலேற்ற வேண்டியிருக்கும். இவர்கள் அனைவருமே முஸ்லீம்களாகத்தான் இருப்பார்கள் என்று சொல்ல முடியாது.

## நியாயமற்ற போர்

செப்டம்பர் 11 தாக்குதல்களுக்கு ஒசாமா பின் லாடன் பொறுப்பா? இல்லையா? நமக்குத் தெரியாது. அவரே பொறுப்பென்றாலும்கூட அவரைப் பிடித்து நீதியிடம் கொண்டு வரவோ அவரிடம் நீதியைக் கொண்டு சேர்க்கவோ போவதாகச் சொல்லி புஷ்ஷின் அமெரிக்கா தொடுத்துள்ள போருக்கு நியாயமே இல்லை.

செப்டெம்பர் 20ஆம் நாள் நாடாளுமன்றத்தில் அதிபர் புஷ் உரையாற்றினார்: ''இவர்கள் யார்? இவர்களை ஆதரிக்கும் அரசுகள் எவை? என்பதை நாம் துல்லியமாக அறிவோம்.''

அமெரிக்காவின் பகைவர்கள் என்றால் சுதந்திரத்தின் பகைவர்கள் என்பது புஷ்ஷின் வரையறை. அவர் சொன்னார் :

''அவர்கள் நம்மை வெறுப்பது ஏன்? என்று அமெரிக்கர்கள் கேட்கிறார்கள். அவர்கள் நம் உரிமைகளை வெறுக்கிறார்கள் - நம்

## மறவா நினைவுகள்

இதை எழுதுகிற நான் 1994 கோடையில் அமெரிக்கப் பயணம் சென்ற போது, நண்பர் ஜெயக்குமாருடன் நியூயார்க் சென்று இந்த வானுயர்ந்த கட்டடங்களை வியந்து பார்த்ததும், 107ஆம் மாடியில் உள்ள 'உலகச் சாளரம்' (Windows on the world) உணவகத்தில் உண்டதும், 110ஆம் மாடியில் நின்று, ஹட்சன், கிழக்கு ஆறுகளையும், அட்லாண்டிக் மாகடலையும், கடலோடும் கலங்களையும், அருகில் போல் தெரிந்த சுதந்தர தேவியின் சிலையையும், கீழே சிறிய, இன்னுஞ் சிறிய தீப்பெட்டிகளாய்க் கிடந்த அடுக்குமாடிக் கட்டடங்களையும் கண்டு, படம் பிடித்து மகிழ்ந்ததும் மறவா நினைவுகள்! நான் அந்த 110 மாடிக் கட்டடத்தின் உச்சியில் நின்ற நாளில், நின்ற நேரத்தில் இந்த வான் தாக்குதல் நடைபெற்றிருந்தால்...?



முன்பே 1993இல் உலக வர்த்தக மையத்தின் அடித்தளத்தில் நடைபெற்ற ஒரு வெடிகுண்டுத் தாக்குதல் பற்றி நான் போயிருந்த நேரத்தில் குறிப்பிட்டார்கள் என்றாலும், பின்னர் நிகழவிருந்த பேரழிவை யாரும் ஊகிக்க வழியில்லை.



படிப்பகம்

www.padippakam.com

மதவுரிமை, நம் பேச்சுரிமை, நம் வாக்குரிமை, கூட்டம் கூடும் உரிமை, ஒருவருக்கு ஒருவர் கருத்து மாறுபடும் உரிமை இவற்றையெல்லாம் வெறுக்கிறார்கள் என்பதே காரணம்.''

ஆக, புஷ்ஷின் பார்வையில் அமெரிக்க அரசு யாரைப் பகைவர் என்கிறதோ அவரே பகைவர்; எதைப் பகைமைக்குக் காரணம் என்கிறதோ அதுவே காரணம். இதற்கெல்லாம் என்ன சான்று எனக் கேட்கக் கூடாது. அமெரிக்க மக்களின் தீராத் துயரையும், ஆறாச் சினத்தையும் அவசர அவசரமாகப் பயன்படுத்தி, அவர்களின் உரிமைகளுக்கும் அவர்களின் வாழ்க்கை முறைக்கும் ஆபத்து வந்திருப்பதாக அச்சுறுத்தி, கொண்டவர்கள் என்பதில் சந்தேகமே இல்லை. அவர்கள் தங்கள் உயிரையே கருவியாக்கித்தான் இந்தப் பேரழிவை உண்டு பண்ணினார்கள் என்பதே இதற்குப் போதிய சான்று. உயிராசையைக் காட்டிலும் 'இலட்சிய வெறி'யே அவர்களிடம் மேலோங்கியிருந்தது - அமெரிக்காவை அழிக்கும் வெறி!

அவர்களின் இந்த அமெரிக்க வெறுப்புக்குக் காரணம் அந்த நாடு சுதந்தரத்தின் பக்கம் நின்று வருவது தானா? இல்லவே இல்லை என்பதற்கு வரலாறு சான்று பகரும். அமெரிக்க அரசு உலகின் பல நாடுகளிலும் இராணுவச் சர்வாதிகாரத்தையும் மத வெறியையும் இனப் படுகொலை

### பயங்கரவாத அமெரிக்கா

புஷ்ஷின் மூதாதையர்கள் அமெரிக்கக் கண்டத்தின் ஆதிக் குடிகளாம் செவ்விந்தியர்களை மிருகங்களைப் போல் வேட்டையாடிய வரலாற்றின் இரத்தக் கவிச்சை இப்போதுங்கூட அவரது 'போர் முழக்கத்தில்' வீசத்தான் செய்கிறது.

இருபதாம் நூற்றாண்டில் அப்பாவி மக்களை அநியாயமாகப் படுகொலை செய்த கொடும் பெரும் பயங்கரவாத நிகழ்ச்சி என்றால், முதலில் நினைவுக்கு வருவது...1945இல் இரண்டாம் உலகப் போர் முடியப் போகும் நிலையில் ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய இரு ஜப்பானிய நகரங்கள் மீது அமெரிக்கா



அன்று... வியத்நாம் கிராமம்



இன்று... அமெரிக்க நகரம்

அமெரிக்க அரசு தன் வல்லாதிக்க நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முற்பட்டிருக்கிறது என்பதே உண்மை. கண்ணீர்த் திரை பார்வையை மறைத்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அமெரிக்க மக்களால் உண்மைகளைக் காண முடியாதல்லவா? நியூயார்க் இரட்டைக் கோபுரங்கள் மீதும் வாஷிங்டனில் பெண்டகன் மீதும் பயண வானூர்திகளைச் செலுத்திய பயங்கரவாதிகள் - ஒசாமாவின் ஆட்களாயினும் சரி, வேறு எவராயினும் சரி - அமெரிக்காவின் மீது கடுஞ்சினமும் கொடும் பகையும் யையும் ஆதரித்து நின்றதற்கும் நிற்பதற்கும் அடுக்கடுக்கான சான்றுகள் உண்டு. அது தானே பிற நாடுகளை அழிக்க, ஒடுக்க, மிரட்டிப் பணிய வைக்கப் படை வலிமையைப் பயன்படுத்தியதில்லையா? பல நாடுகளில் அமெரிக்க அரசையே பயங்கரவாதியாக மக்கள் கருதுவதற்குக் காரணமே இல்லையா? படை வலிமையை மட்டுமல்ல, பொருள் வலிமையையும் கூட அமெரிக்க அரசு தன் பயங்கரவாத விளையாட்டுக்கு அன்றும் இன்றும் பயன்படுத்தி வருவது உண்மை இல்லையா?

அணுகுண்டுகள் வீசி 2,20,000 மனித உயிர்களைப் பொசுக்கிய கொடுமைதான். உலக வரலாற்றில் ஆகப் பெரும் பயங்கரவாதச் செயல் என்றால் இதைத்தான் சொல்ல வேண்டும்.

கொரியாவிலும் வியத்நாமிலும் அமெரிக்காவும் அதன் கைக்கூலி அரசுகளும் இலட்சக்கணக்கானவர்களைக் கொலை செய்தன. வியத்நாமில் அமெரிக்கா நடத்திய போருக்கு எதிராக உலகெங்கும் போலவே அமெரிக்காவிலும் மக்கள் போராடினார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# அமைதிக் குரலும் போர்வெறிக் கூச்சலும்

அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் மக்களிடையே போர் வெறி மூட்டி விடப்பட்டுள்ள இந்த நேரத்திலும் கூட அமைதியின் குரல் அடியோடு ஒடுங்கி விடவில்லை. அமெரிக்காவின் புகழ்பெற்ற சிந்தனையாளர்களில் ஒருவரான நோம் சோம்ஸ்கி எழுதுகிறார் : ''பயங்கரவாதத் தாக்குதல்கள் பெருங்கொடுமைகளே. ஆனால் இவற்றை விடவும் பெரிய அளவிலான கொடுமைகள் என்று சிலவற்றைக் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாக, நம்பும்படியான காரணம் எதுவுமில்லாமல் சூடான் மீது கிளிண்டன் நடத்திய குண்டு வீச்சு அதன் மருந்து வழங்கலில் பாதியை அழித்து ஏராளமானவர்களைச் சாகடித்தது. எவ்வளவு பேர் செத்தார்கள் என்று யாருக்கும் தெரியாது. ஏனென்றால் இது பற்றிய விசாரணையை ஐ.நா.வில் அமெரிக்கா தடுத்து விட்டது.''



நோம் சோம்ஸ்கி

சூடானில் மருந்துத் தொழிற்சாலை மீது அமெரிக்க விமானங்கள் குண்டு வீசியது ஏன் தெரியுமா? அது வேதியியல் ஆயுதங்களை உற்பத்தி செய்கிறது என்று தவறாக நினைத்து விட்டார்களாம்!

கிளிண்டன், இராக் மீது மீண்டும் குண்டு வீச ஆணையிட்டார் - மோனிக்கா லெவின்ஸ்கி விவகாரத்திலிருந்து அமெரிக்கப் பொதுமக்களின் கவனத்தைத் திருப்புவதற்காக!

பிரித்தானியப் பத்திரிகையாளர் ராபர்ட் ஃபிஸ்க் எழுதினார் : ''இது சனநாயகத்துக்கும் பயங்கரவாதத்துக்கும் இடையிலான போர் என்று வரும் நாட்களில் உலகை நம்பச் சொல்வார்கள். ஆனால் அது அப்படியில்லை. அமெரிக்க ஏவுகணைகள் பாலத்தீன இல்லங்களை நொறுக்கியது பற்றியும், அமெரிக்க ஹெலிகாப்டர்கள் 1996இல் ஒரு லெபானிய ஆம்புலன்சுக்குள் ஏவுகணைகள் செலுத்தியது பற்றியும், கானா எனும் சிற்றூரில் அமெரிக்கக் குண்டுகள் விழுந்தது பற்றியும், அமெரிக்காவின் இஸ்ரேலியக் கூட்டாளி ஊட்டி வளர்த்த லெபானியக் குடிபடை ஒன்று அகதி முகாம்களில் நுழைந்து சரமாரியாக வெட்டியது, கற்பழித்துக் கொலை செய்தது பற்றியும் கூட தெரிந்து கொள்ள வேண்டியிருக்கும்.''

இதனால் எல்லாம் செப்டெம்பர் 11 தாக்குதல்களை இந்த எழுத்தாளர்கள் நியாயப்படுத்துவதாகப் புரிந்து கொண்டு விடக் கூடாது. சோம்ஸ்கி சொல்வது போல், ''போர்வெறி கொண்ட இறுகிய வலது சாரிக்குக் கிடைத்த பரிசு இந்தக் குற்றம்.'' ஏன் இப்படி நிகழ்ந்தது? என்று ஆராய்ந்து காரணங்களை எடுத்துக்காட்டுவது வேறு, நடந்ததை நியாயப் படுத்துவது வேறு. இரண்டுக்கும் அடிப்படையான வேறுபாடு உள்ளது.

செப்டெம்பர் 11 தாக்குதல்களைச் சொல்லி அமெரிக்க வல்லாதிக்கத்தின் போர் வெறிக்குத் தூபமிட்ட பல எழுத்தாளர்களில் ஒருவர் ஜார்ஜ் வில். 1991இல் வளைகுடாப் போரில் இராக்கின் தலைநகர் பாக்தாத் மீது குண்டுகள் விழத் தொடங்கிய போது இதே வில் என்ன சொன்னார் தெரியுமா? தண்டனைப் பணியைக் காட்டிலும் கூடுதலாகக் கல்விப் பணி செய்வதே இந்தக் குண்டுகளின் நோக்கம் என்றார். எப்படி? இத்தகைய மலைக்க வைக்கும் தொழில்நுட்ப ஆற்றல் கொண்ட ஒரு நாகரிகம் தரக் கூடிய நற்பயன்களில் பங்கு பெற அரபு மக்களுக்கு அழைப்பு விடுப்பதன் வாயிலாகக் குண்டுகள் கல்விப் பணி செய்கின்றனவாம். நியூயார்க்கின் இரட்டைக் கோபுரங்களைத் தகர்த்த பயங்கரவாதிகளும் கூட முக்கியமாக அமெரிக்க மக்களுக்கு அரசியல் கல்வி புகட்டுவதற்காகவே இப்படிச் செய்தோம் என்று சொன்னால் எப்படி இருக்கும்?

இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் (இதே செப்டெம்பர் 11) சிலி நாட்டில் அமெரிக்க மத்திய உளவு நிறுவன (CIA) ஏற்பாட்டில் இராணுவ ஆட்சிக் கவிப்பு ஒன்று நடைபெற்றது - மக்களால் சனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சல்வடார் அலெண்டேயின் அரசு கவிழ்க்கப்பட்டதோடு, அவர் கொலையும் செய்யப்பட்டார். அமெரிக்கா அரியணையேற்றிய படைத் தளபதி ஜெனரல் பினோசெட் நடத்திய பாசிசப் பயங்கரவாத ஆட்சி முதற்சில வாரங்களில் மட்டும் 35,000 பேரைக் கொலை செய்தது. பினோசெட் அரசாண்ட சுமார் இருபதாண்டு காலமும் சிலி மக்கள் அனுபவித்த கொடுந்துன்பம் இன்று உலகறிந்த செய்தியே.

1982இல் அமெரிக்க ஆதரவோடு இஸ்ரேலியப் படை லெபனானை ஆக்கிரமித்து 17,500 பேரைக் கொன்று குவித்தது. இந்தச் சின்ன புஷ்ஷின் தகப்பனார் பெரிய புஷ் அதிபராக இருந்த போதுதான் அமெரிக்க அரசு இராக் மீது போர் தொடுத்தது. பாலைவனப் புயல் என்று பெயரிட்டப்பட்ட இந்தத் தாக்குதலில் இரண்டு இலட்சம் மக்கள் கொலையுண்டார்கள். போர் ஓய்ந்த பிறகும் அமெரிக்கா வலியுறுத்தி விதிக்கச் செய்த தடைகளால் அடுத்த பத்தாண்டு காலத்தில் குறைந்தது ஐந்து



படிப்பகம்

www.padippakam.com

இலட்சம் இராக்கியக் குழந்தைகள் மடிந்தனர். இது குறித்து 1996இல் அப்போதையை அமெரிக்க அயலுறவுத் துறை அமைச்சர் மேட்லின் அல்பிரைட் ஒரு தொலைக் காட்சி நிகழ்ச்சியில் சொன்னார் :

''எல்லாவற்றையும் கருதிப் பார்க்கையில், இந்த விலை தகும் என்றே கருதுகிறோம்.''

இராக்கிற்கு எதிரான தடைகள் தொடர்கின்றன, குழந்தைகள் மடிவதும் தொடர்கிறது.

இன்று இஸ்லாமியப் பயங்கர வாதம் பற்றிப் பேசும் அமெரிக்க அரசின் அரவணைப்பில்தான் இஸ்ரேலின் யூதப் பயங்கரவாதம் வளர்ந்தது என்பதை மறந்து விடக் கூடாது. சயோனிசப் பயங்கரவாதி கள் 1947-48இல் பாலத்தீன மக்களை அவர்களது மண்ணிலிருந்து விரட்டி யடிக்க பயங்கரவாதக் கொடுஞ் செயல்கள் புரிந்தார்கள். பயங்கர வாதத்தில் பிறந்து பயங்கரவாதத்தில் வளர்ந்து பயங்கரவாதத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் அரசு என்றால் இஸ்ரேலைத்தான் சொல்ல வேண்டும். எண்ணெய் வளமிக்க அரபு நாடுகளை மிரட்டிப் பணிய வைத்துச் சுரண்டுவதற்கு அமெரிக்கா இஸ்ரேலை அடியாளாகவே வளர்த்து விட்டுள்ளது.

நிகாரகுவாவில் சாண்டினிய அரசைக் கவிழ்ப்பதற்காக நாசவேலை கள் செய்ய 'காண்ட்ராஸ்' என்னும் பயங்கரவாதிகளை அமெரிக்கா ஏவியதையும், கியூபாவில் காஸ்ட்ரோ தலைமையிலான புரட்சி அரசை வீழ்த்த அன்று முதல் இன்று வரை அது இராணுவ, பொருளியல் பயங்கர வாதத்தில் ஈடுபட்டு வருவதையும் குறிப்பிட்டாக வேண்டும். காஸ்ட்ரோவைக் கொலை செய்யப் பல வழிகளிலும் சி.ஐ.ஏ. முயன்று தோற்றது.

புவித் தாயின் உடலில் அமெரிக்க அரச பயங்கரவாதத்தின் கொடு நகங்கள் பதியாத இடங்கள் மிகச் சிலவே.

அதிபர் புஷ், ''நாம் அமைதியை விரும்பும் தேசம்'' என்று சொல்லி விட்டுத்தான் ஆப்கானிஸ்தான் மீது வான் தாக்குதல் நடத்தப் போவதாக அறிவித்தார். பிறகொரு சந்தர்ப்பத்தில் முழங்கினார் :

''இது நம் கடன், அமெரிக்காவின் கடன். உலகிலேயே மிக அதிகமாக உரிமைகள் வாழும் தேசம் நமது; வெறுப்பு, வன்முறை, கொலைகள், தீமை இவற்றையெல்லாம் மறுதலிக் கிற அடிப்படை விழுமியங்களின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ள தேசம். நாம் ஓய மாட்டோம்.''

''அமைதியை விரும்பும்' தேசம்'' ஏவிய போர் வானூர்திகள்தான் ஹனோய் மீதும் பாக்தாத் மீதும் பெல்கிரேடு மீதும் சமுக்காளக் குண்டுவீச்சு நடத்தின. நாற்பதினாயிரம் அடி உயரத்திலிருந்து போடப்பட்டுப் பல்லாயிரம் மக்களின் வாழ்வை முடித்த நாபாம் நச்சுக் குண்டுகளும் கொத்துக் குண்டுகளும்தான் வன்முறையை மறுதலிக்கும் விழுமியங்களைப் புவிப் பரப்பெங்கும் விதைத்தன போலும்.

**'பக்கச் சேதம்'**

அமெரிக்கப் படையினர் நடத்தும் தாக்குதல்களில் சாதாரண மக்கள் பெரு மளவில் மடிவது பெண்ட கனுக்கே தெரியும். இந்த உயிரிழப்புக்கு அது ஒரு பெயர் கொடுத்துள்ளது. ''பக்கச் சேதம்!'' பக்க விளைவு போல் பக்கச் சேதம்! அப்பாவி மக்களின் உயிரைப் பறித்து விட்டு அதனைப் 'பக்கச் சேதம்' என்று வர்ணிக்கும் உரிமை பெண்டகனுக்கு மட்டும்தானா? இரட்டைக் கோபுரங்களை மோதித் தகர்த்தவர்களுக்குக் கிடையாதா? என்ற கேள்வி எழத்தான் செய்யும்.

உலகின் பல பகுதிகளிலும் 'பக்கச் சேதம்' பற்றிக் கவலைப்படாமல் அமெரிக்கா தொடுத்துள்ள போர்கள் எல்லாம் சுதந்தரத்துக்கான 'புனிதப் போர்களே'! எந்தச் சுதந்தரம்? சந்தைச் சுதந்தரம்! யாருக்கு? அமெரிக்கப் பன்னாட்டுக் குழுமங் களுக்கு! புஷ் இதை மறைத்துப் பேசலாம். வெளிப்படையாகப் பேசுவதற்கு வேறு ஆட்கள் இருக்கிறார்கள் - த நியூயார்க் டைம்ஸ் ஏட்டில் தாமஸ் எல். பிரீட்மேன் எழுதினார் : ''சந்தையின் மறைந் துள்ள கை வலுப்பெற வேண்டும் என்றால் ஓங்கிக் குத்தும் முட்டி மறைந்திருக்க வேண்டும். மக்டன்னல் டக்ளஸ் இல்லாமல் மக்டொனால்டு (உணவுக் கடைத் தொடர்) செழிக்க முடியாது... சிலிக்கன் பள்ளத்தாக்கின் தொழில்நுட்பங்கள் செழிப்புற்றிட உலகைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளும் மறைந்துள்ள முட்டிதான் அமெரிக்கத் தரைப்படையும் வான் படையும் கடற்படையும்...''



ஆப்கன் குழந்தைகளின் பதுங்கு குழி அமெரிக்காவுக்குப் புதைகுழி ஆகுமா?

உலகிலேயே படை வலிமையில் அமெரிக்க அரசுக்குத்தான் முதலிடம். அமெரிக்க இராணுவத்தில் 14 இலட்சம் நிலையான படையாட்களும் 11 இலட்சம் சேமப் படையாட்களும் உள்ளனர். அது மட்டுமன்று, உளவுப் பணிகளுக்காக அமெரிக்கா ஆண்டுக்கு 3,000 கோடி டாலர் (கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம் கோடி ரூபாய்) செலவிடுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இத்தனையும் எதற்காக? சுதந்தரத்தைப் பாதுகாப்பதற்காக! அமெரிக்கா மற்றும் அதைச் சார்ந்த வல்லரசுகளின் சந்தைச் சுதந்தரத்தைப் பாதுகாப்பதற்காக! மற்ற நாடுகளின் சுதந்தரத்தைப் பறிப்பதற்காக!

அமெரிக்க வல்லாதிக்கத்தின் ஆக்கிரமிப்புப் போர் வரலாற்றின் பகைப்புலத்தில் நோக்கும் போது, 'செப்டெம்பர் 11' அமெரிக்க அரசுக்கு வரப்பிரசாதம் என்பது விளங்கும். இதைச் சாக்கிட்டு மீண்டும் போர் நடத்தலாம்! உலகை மீண்டும் அச்சுறுத்தலாம்! படியாத அரசுகளைப் படிய வைக்கலாம்! உலக இயற்கை வளங்கள் மீதும் உலகச் சந்தை மீதுமான பிடியை மேலும் இறுக்கலாம்! புதிய கொலைக் கருவிகளைச் சோதித்துப் பார்க்கலாம்! போர்த் தளவாட உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ளலாம்! பன்னாட்டுப் பெரு முதலாளிகளை மேலும் கொழுக்க வைக்கலாம்!

ஆம். பின் லாடனைப் பிடிப்பதாகச் சொல்லிக் கொண்டு ஆப்கானிஸ்தான் மீது குண்டு மழை பொழிகிறது அமெரிக்கா. பின் லாடன்தான் குற்றவாளி என்பதற்குச் சான்று காட்டினால் அவரை முறைப்படி ஒப்படைக்கத் தயார் என்று தலிபான் அறிவித்தது. இதற்கு புஷ் அளித்த பதில்: இந்தக் கோரிக்கை பேச்சுவார்த்தைக்குரியதன்று.

### புஷ் புஷ் புஷ்

புஷ் சூளுரைத்தார் ''பன்னாட்டுப் பயங்கரவாதி ஒசாமா பின் லாடனை உயிருடனோ பிணமாகவோ பிடிக்கும் வரை இந்தப் போர் ஓயாது.''

ஒருவேளை பின் லாடன் பிடிபட்டு விட்டால் அமெரிக்கா தொடர்ந்து போர் செய்வதற்குக் காரணம் இல்லாமல் போய் விடுமே, என்ன செய்வது? புஷ் அறிவித்தார் :

''தலிபான் அரசை வீழ்த்துவதே ஆப்கன் போரின் நோக்கம்.''

ஒருவேளை தலிபான் அரசு வீழ்ந்து விட்டால்... போரை முடித்துக் கொள்ள வேண்டியிருக்குமே, என்ன செய்வது? சளைக்கவில்லை புஷ். இதோ அவரின் சண்டமாருதம் :

''ஒரு தனி மனிதரையோ ஓர் அமைப்பையோ அழிப்பதன்று நோக்கம். ஒரேயடியாக இந்த உலகத்தை விட்டுப் பயங்கரவாதத்தைத் துரத்தியடிப்பதே குறிக்கோள். இந்தப் போர் ஒரு நாளிலோ ஒரு வாரத்திலோ, ஒரு மாதத்திலோ, ஏன் ஓராண்டிலோ கூட முடிந்து விடாது. பத்தாண்டுகள், பல பத்தாண்டுகள் ஆகலாம்.''

சுமார் 60 நாடுகளில் பரவிக் கிடக்கும் இலட்சக் கணக்கானவர்களின் வலைப் பின்னலுக்கு எதிரான இந்தப் போர் ''ஓயவே ஓயாத பணி'' என்றார் புஷ். இந்தப் போர் நடவடிக்கைக்கு முதலில் 'முடிவிலா நீதி' என்று பெயரிடப்பட்டது. முடிவிலாப் போர் என்பதைத்தான் இடக்கரடக்கலாய் அப்படிச் சொன்னார்கள் போலும். முடிவிலா நீதி வழங்குவது இறைவனின் வேலையே தவிர மனிதனின் வேலையன்று எனச் சொல்லி எதிர்ப்பு வந்ததால் 'நீண்டு நிலைக்கும் சுதந்தரம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. முடிவின்றிப் போர் புரிந்தால்தானே முடிவின்றிப் போர்க் கருவிகள் செய்து முடிவின்றி சாவு வணிகம் செய்யும் சுதந்தரம் நீண்டு நிலைக்கும்?


ஜார்ஜ் டபிள்யூ. புஷ்

செப்டெம்பர் 20 நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் புஷ் 'அறை கூவல்' விடுத்தார் : ''ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு தேசமும். இப்போது ஒரு முடிவெடுத்தாக வேண்டும். நீங்கள் எங்களை ஆதரிக்க வேண்டும், அல்லது பயங்கரவாதிகளை ஆதரிப்பதாகும்.'' நீங்கள் புஷ் கட்சியில் உடனே சேர்ந்து விட வேண்டும். இல்லையேல் அவர் உங்களை ஒசாமா கட்சியில் சேர்த்து விடுவார். இந்தப் 'பயங்கரவாதிகளை' - ஒசாமா உட்பட - நேர்வகையிலும் எதிர்வகையிலும் உருவாக்கி வளர்த்ததில் அமெரிக்கா வகித்த பங்கை புஷ்ஷுக்கு நினைவு படுத்துவது யார்?

நீ என் நண்பனாய் இரு, இல்லையேல் உன்னை என் பகைவனாகவே கருதுவேன் - இதுவே புஷ்ஷின் புதிய தத்துவம்.

அமெரிக்க நாடாளுமன்றம் அதிபர் புஷ்ஷுக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளது. 1964இல் வியத்னாமில் அமெரிக்கப் படைகள் தலையிடுவதற்கு அப்போதைய அதிபர் லிண்டன் ஜான்சனுக்கு நாடாளுமன்றம் அளித்த அதிகாரங்களுக்கு இணையானவை இவை. பயங்கரவாதத்தின் மீது போர் தொடுப்பது என்ற பெயரால் நாடுகளுக்கும் அமைப்புகளுக்கும் தனி மனிதர்களுக்கும் எதிராகத் தேவையான அனைத்து வன்முறையும் பயன்படுத்த புஷ் அதிகாரம் பெற்றுள்ளார். இந்த அதிகாரங்களுக்குக் கால வரம்பு ஒன்றும் இல்லை. ''வருங்காலத் தாக்குதல்களை'' எதிர்பார்த்தும்கூட அவர் செயல்படுவதற்கு அதிகாரமளிக்கப் பட்டது.

### குண்டு மழை

அக்டோபர் 7ஆம் நாள் அமெரிக்க அரசு ஆப்கானிஸ்தானுக்கு எதிரான வான்தாக்குதல்களைத் தொடங்கியது. பயங்கரவாதத்துக்கு எதிரான பன்னாட்டுக் கூட்டணியின் ஆதரவோடு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. குரூஸ் ஏவுகணைகளும், குண்டுவீச்சு வானூர்திகளும், டொமோஹாக்



படிப்பகம்

www.padippakam.com

ஏவுகணைகளும், பதுங்கு குழிகளை உடைத்து நொறுக்கும் ஏவுகணைகளும், பெருநிறைக் குண்டுகளும் பயன்படுத்தப்பட்டன.

இந்தத் தாக்குதலுக்காக ஐக்கிய நாடுகள் அமைப்பின் இசைவைப் பெறுவதைப் போன்ற எந்தச் சம்பிரதாயம் பற்றியும் அமெரிக்க அரசு கவலைப்படவில்லை. போர் தொடங்கி ஒரு திங்களுக்கும் மேலாயிற்று. வானூர்திக் குண்டுவீச்சுகளும் ஏவுகணைத் தாக்குதல்களும் மென்மேலும் அதிகரித்து வருகின்றன. இந்தத் தாக்குதலில் தலிபான் படைகளுக்கு என்ன சேதம் ஏற்பட்டது என்பது பற்றித் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் அப்பாவி மக்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்துச் செய்திகள் வந்த வண்ணமுள்ளன.

அக்டோபர் 11ஆம் நாள் ஜலாலாபாத் அருகே அமெரிக்கக் குண்டுகள் கோரம் என்னும் சிற்றூரைத் தரைமட்டமாக்கியதில் 160 பேர் கொல்லப்பட்டனர். அக்டோபர் 22ஆம் நாள் ஹெராத்தில் நூறு படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையை அமெரிக்கக் குண்டுகள் தகர்த்ததில் 100 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர். ஒரு முதியோர் இல்லமும் தாக்கப்பட்டிருக்கலாம் என அமெரிக்க அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர். அக்டோபர் 17ஆம் நாள் வான் தாக்குதல்களுக்கு அஞ்சி ஒரு சுமையுந்தில் ஏறித் தப்பிச் சென்று கொண்டிருந்தவர்கள் அனைவரையும் அமெரிக்கக் குண்டு தாக்கிச் சாகடித்தது. ஒரு சில நிகழ்ச்சிகளை மட்டும் இங்கு குறிப்பிட்டுள்ளோம்.

சாதாரண மக்கள் செத்து மடிவது மட்டுமல்ல, அவர்களுக்கு உதவும் பொருட்டு செஞ்சிலுவைச் சங்கம் அமைத்திருந்த மூன்று பண்டக சாலைகளும் குண்டுவீச்சுக்குள்ளாகித் தீப்பற்றிக் கொண்டன. உலகிலேயே அதிக கண்ணி வெடிகள் புதையுண்டிருக்கும் நாடாகிய ஆப்கானிஸ்தானில் ஐ.நா. உதவியோடு கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருப்பவர்களையும் அமெரிக்கக் குண்டு விட்டு வைக்கவில்லை. ஒரு தாக்குதலில் அவர்களில் நால்வர் உயிரிழந்தனர்.

## குதர்க்கம்

செப்டெம்பர் 11 நிகழ்வுகள் குறித்து ஆர்.எஸ்.எஸ். ஏடாகிய 'ஆர்கனைசர்' ஆசிரிய உரையில் இப்படிச் சொன்னது : ''இப்போது நியூயார்க்கும் பெண்டகனும் அனுபவித்ததைத்தான் பல நூறு ஆண்டுகளாக இந்தியா அனுபவித்து வருகிறது. ஓரிறை நம்பிக்கையானது பயங்கரவாத ஆபத்துக்குத் தூபமிடுகிறது. இந்த நம்பிக்கை சகிப்பின்மையை வளர்க்கிறது.'' அதாவது, பல நூறு ஆண்டுகளாக இஸ்லாம் இந்தியாவைத் தாக்கியதாம், இப்போது அமெரிக்காவையும் தாக்கியுள்ளதாம்.

விசுவ இந்து பரிஷத் வெளிப்படையாகவே கூறியது : ''இந்துக்கள் இஸ்லாமியப் பயங்கரவாதத்தை எதிர்த்து கடந்த ஆயிரம் ஆண்டுகளாக ஓயாமல் போர் புரிந்து வந்துள்ளார்கள். ஆனால் இப்போதுதான் இஸ்லாமியப் பயங்கரவாதத்தால் அமைதிச் சக்திகளுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை உலகம் உணரத் தலைப்பட்டுள்ளது.''

இந்துத்துவக் குடும்பத்திலிருந்து எழுந்த இந்தக் குரல்கள் அரசாங்கத் தலைவர்களிடமும் எதிரொலித்தன.

### ஆப்கன் துயரம்

போரும் அழிவும் ஆப்கன் மக்களுக்குப் புதியவையல்ல. உலகிலேயே மிக அதிகமாய்ப் போர்ச் சேதத்திற்கு உள்ளான நாடுகளில் ஆப்கானிஸ்தானும் ஒன்று. 1979இல் சோவியத் படை ஆப்கானிஸ்தானில் நுழைந்தது. அந்தப் படைக்கு எதிராக ஆப்கன் 'முஜாகிதீன்கள்' பத்தாண்டு போர் புரிந்தார்கள். அவர்களுக்கு அமெரிக்காவும் பாகிஸ்தானும் படைக் கருவிகளும் பல வகை உதவிகளும் வழங்கின. பத்தாண்டு காலம் நீடித்த போரில் லட்சக்கணக் கானவர்கள மடிந்தனர். சோவியத் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகும் ஆப்கன் துயரம் தணிந்த பாடில்லை.

ருஷ்யர்களை விரட்டியடிப்பதற்காகப் போராடிய முஜாகிதீன் குழுக்கள் இப்போது தமக்குள் சண்டையிட்டுக் கொண்டன. நாட்டின் பொருளாதாரம் அடியோடு சிதைந்து போயிற்று. சமூக அமைதி குலைந்தது. தடியெடுத்தவன் தண்டல்காரன் என்ற முறையில் துப்பாக்கி ஏந்திய குழுக்கள் விருப்பம் போல் நாட்டைச் சூறையாடின. போதைப் பொருள் உற்பத்தியும் வணிகமும் பெருகியது. ஆப்கானிஸ்தான் வழியாகச் சென்ற சரக்குந்துகள் வழி நெடுகிலும், 'சோதனைச் சாவடிகளில்' கப்பம் கட்டி விட்டுச் செல்லும் நிலை. அமெரிக்க சி.ஐ.ஏ., பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. ஆகிய உளவு நிறுவனங்கள் இஸ்லாமியத் தீவிரவாதத்தின் அடிப்படையில் கம்யூனிசத்துக்கும் புரட்சிகர சனநாயகத்துக்கும் எதிரான கலகக் குழுக்களைப் பயிற்றுவித்து உலகின் பல பகுதிகளிலும் பயன்படுத்திக் கொண்டன.

1995இல் தலிபான் இயக்கம் ஆப்கானிஸ்தானின் பெரும் பகுதியைக் கைப்பற்றியது. மாணவர்களின் இயக்கம் என்று சொல்லப் பட்டாலும் தலிபான்கள் கடுமையான மத அடிப்படைவாதிகளாவர். அதே போது ஆப்கானிஸ்தானில் ஓரளவுக் காவது அவர்கள் ஒழுங்கை நிலை நாட்டினார்கள். கொலை, கொள்ளை, பாலியல் கொடுமைகள், கட்டாய வரி வசூல், போதைப் பொருள் உற்பத்தி ஆகியவற்றுக்கு முடிவு கட்டினார்கள்.

மறுபுறம், மதச் சட்டங்களின் பெயரால் பெண்ணுரிமைக்கு எதிராகவும் பெண்களுக்கே எதிராகவும் கடுமையான அடக்குமுறையை மேற்கொண்டார்கள். பெண் கல்வி பெரும்பாலும் தடை செய்யப்பட்டது. பெண்கள் அரசுப் பணியிலிருந்து



படிப்பகம்

www.padippakam.com

# பின் லாடனும்



ஓசாமா பின் லாடன் 1957இல் முகம்மது பின் அவாத் லாடனுக்கு மகனாகத் தெற்கு ஏமனில் பிறந்தார். பிறகு அவரது குடும்பம் சவுதி அரேபியாவுக்குக் குடிபெயர்ந்தது. அரச குடும்பத்தைத் தவிர்த்து விட்டால் சவுதி அரேபியாவிலேயே மிகப் பணக்காரக் குடும்பம் அவர்களுடையதுதான். பின் லாடனின் தந்தையார் மெக்கா, மெதினா நகரங்களைப் புதுப்பித்ததால் சவுதி அரச குடும்பத்தாரும் பொதுமக்களும் அவரது குடும்பத்தைப் பெரிதும் மதித்தனர்.

பின் லாடன் ஜித்தா பல்கலைக் கழகத்தில் படித்தார். அங்கு லாடனின் உலகப் பார்வைக்கு முனைவர் அப்துல்லா அஸ்ஸாம் வடிவம் கொடுத்தார்.

1980களின் முற்பகுதியில் அவர் பாகிஸ்தான் அல்லது ஆப்கானிஸ்தானுக்கு வந்தடைந்ததாக சில மேற்கத்தியப் புலனாய்வு நிறுவனங்கள் சொல்கின்றன.

அஸ்ஸாமும் டாக்டர் ஐமன் ஜவாஹிரியும் லாடனின் தொடக்கக் காலத்தில் அவரது நம்பிக்கைக்குரிய வழிகாட்டிகளாக இருந்தார்கள். அஸ்ஸாம் பாலஸ்தீன ஹமாசின் வரலாற்றுத் தலைவராக இன்று மதிக்கப்படுகிறார். டாக்டர் ஐமன் ஜவாஹிரி எகிப்திய அதிபர் அன்வர் சதாத் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்.

1982க்கும் 1984க்கும் இடையே அஸ்ஸாம் மக்தப் அல் கிடிமாத் இல் முஜாகிதீன் அல் அராபை (மேக்) நிறுவினார். இதற்கு நிதியுதவி செய்தவர்களில் ஓசாமா முதன்மையானவர். அஸ்ஸாமுக்கு அடுத்த நிலையில் வைத்து ஓசாமா மதிக்கப் பெற்றார்.

1984இலிருந்து 1986 வரை பாகிஸ்தானுக்குள்ளும் ஆப்கானிஸ்தானுக்குள்ளும் வெளிநாடுகளிலிருந்து அராபியர்களும் முஸ்லீம்களும் வந்து குவிந்த சூழலில் ஓசாமா அரபு நாடுகளில் சுற்றி அலைந்து நிதி திரட்டினார். சோவியத்துக்கு எதிரான போரின் முடிவில் ஓசாமா - அஸ்ஸாம் உறவில் பாதிப்பு ஏற்பட்டது.

நீக்கப் பெற்றார்கள். சரியத் சட்டங்களின்படி குற்றங்களுக்குக் கொடிய தண்டனைகள் வழங்கப்பட்டன. 'ஒழுக்கக் கேடான' பெண்கள் கல்லால் அடித்துக் கொல்லப்படுவதும் 'கள்ள உறவு' கொண்டதாகச் சொல்லப்பட்ட கைம்பெண்கள் உயிரோடு புதைக்கப்படுவதும் நிகழ்ந்ததாகச் செய்திகள் வந்தன. பாமியான் புத்தர் சிலையை தலிபான்கள் தகர்த்தக் கொடுமையைக் கண்டு நாகரிக உலகமே அதிர்ந்தது.

தலிபான் ஆட்சி மனித உரிமைகளுக்கும் சனநாயகத்துக்கும் மாறானது என்பதில் ஐயமில்லை. ஆனால் இது ஆப்கன் மக்கள் தீர்த்துக் கொள்ள வேண்டிய சிக்கலே தவிர அமெரிக்காவோ வேறு அயல் அரசுகளோ குண்டு வீசித் தீர்க்க வேண்டியதன்று. இன்று தலிபானின் இடத்தில் அமெரிக்கக் கூட்டணி அமர்த்த விரும்புகிற முஜாகிதீன் குழுக்கள் இஸ்லாமிய அடிப்படைவாதத்திலும் சனநாயக மறுப்பிலும் பெண்கள் மீதான அடக்குமுறையிலும் தலிபானுக்குச் சற்றும் சளைத்தவையல்ல என்பதைக் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். இந்தக் குழுக்களின் 'வடக்குக் கூட்டணி' என்பது ஆப்கன் மக்களுக்கு இடக்குக் கூட்டணியாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அமெரிக்க வன்தாக்குதலுக்கு எதிராக தலிபான் விடுத்த அழைப்பை ஏற்றுக் கொள்ள மறுத்ததன் மூலமும், அமெரிக்கக் குண்டு வீச்சைப் பயன்படுத்திக் கொண்டு தலிபான்களிடமிருந்து நிலப் பரப்பைக் கைப்பற்ற முயல்வதன் மூலமும் வடக்குக் கூட்டணி ஆப்கன் மக்களுக்குத் துரோகம் செய்து வருகிறது. இந்தப் போரைப் பொறுத்த வரை தலிபான்கள் ஆப்கன் தேசப் பற்றாளர்களாக அமெரிக்க வல்லாதிக்கத்தை எதிர்த்துக் களத்தில் நிற்கிறார்கள். தங்களின் பிற்போக்கான கொள்கைகளும் நடைமுறைகளும் நாடு காக்கும் போரில் இடையூறுகளாக அமைவதை அனுபவம் அவர்களுக்குக் கற்றுத் தரக் கூடும். அல்லது ஒரு கால், தலிபான் இயக்கத்திற்குள்ளிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ புதிய சக்திகள் எழுந்து வரக் கூடும். நம்மால் எதையும் உறுதியாகச் சொல்ல முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

## அல் காய்தாவும்

சோவியத்துப் படைகள் திரும்பிச் செல்ல முடிவெடுத்தவுடன், கலிபாவை - அதாவது மொத்த முஸ்லீம் உலகத்தையும் - ஒரே குடையின் கீழ்க் கொண்டுவரும் நோக்கத்துடன் தனக்கான குழுவை நிறுவ முடிவெடுத்தார் ஒசாமா. இதுவே அல் காய்தா (தளம்) எனப்படுவதாகும். இஸ்லாமியரல்லாத ஆட்சியாளர்கள் அதிகாரத்தில் உள்ள இடங்களில் இஸ்லாமிய அரசுகளை நிறுவ ஒசாமா விரும்பினார். எத்தனையோ கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஒசாமாவும் அஸ்ஸாமும் சேர்ந்தே பணியாற்றினர். 1989 செப்டெம்பரில் அஸ்ஸாம் மர்மமான முறையில் கொல்லப்பட்டார்.

அந்த ஆண்டில் சோவியத்துப் படை திரும்பி விட்டாலும் காபூலில் கம்யூனிஸ்ட் ஆதரவாளரான நஜிபுல்லாவை ஆட்சியில் அமர்த்தியது.

சோவியத்துக்கு எதிரான சண்டைக்குப் பிறகு ஒசாமா சவுதி திரும்பினார். தரிக் அல் கட்வி தலைமையில் தெற்கு ஏமனில் முதல் புனிதப் போர்க் குழுவை உருவாக்க சவுதி அரேபியாவிற்கு உதவி செய்தார்.

இராக் குவைத்துக்குள் நுழைந்ததால் அமெரிக்கா வளைகுடாப் போரை நடத்தியது. சவுதி அரேபியாவின் வேண்டுகோளின்படி, அமெரிக்கா தனது படைகளை அந்நாட்டில் நிறுத்தியது. இரு புனித மசூதிகள் இருக்கும் இடத்தில் முஸ்லீமல்லாத படையினர் இருப்பதை ஒசாமா விரும்பவில்லை. அவர் தன் எதிர்ப்பைத் தெரிவித்தார். இதை சவுதி ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்ளாததால் ஒசாமா அவர்களுக்கு எதிரான பரப்புரையில் இறங்கினார். ஒசாமாவின் பார்வையில் அவர்கள் மத நம்பிக்கையற்றவர்கள். சவுதி ஆட்சியாளர்கள் போலி முஸ்லீம்கள், எனவே சவுதி அரேபியாவில் ஓர் உண்மையான முஸ்லீம் அரசை நிறுவுவது அவசியம் என்றார். இதனால் 1992இல் சவுதி ஆட்சி அவரை நாட்டை விட்டு வெளியேற்றியது. 1994இல் அவரது குடியுரிமையைப் பறித்தது.

இதற்கிடையில் ஹசான் அல் துராபி தலைமையிலான தேசிய இஸ்லாமிய முன்னணி சூடானில் ஆட்சிப் பொறுப்பேற்றது. ஒசாமா தனது நல்ல அனுபவம் வாய்ந்த, பயிற்சி பெற்ற படையாட்களைப் பாகிஸ்தானிலிருந்து சூடானுக்கு 1986இல் மாற்றியிருந்தார். தந்தையார் சவுதியில் செய்த தொழிலை இவர் சூடானில் செய்து வந்தார். சர்வதேச அழுத்தங்களின் காரணமாக 1996இல் ஆப்கானிஸ்தானுக்குத் திரும்பினார். அங்கிருந்து தான் அவர் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்.

1998இல் கிழக்கு ஆப்பிரிக்காவில் அமெரிக்கத் தூதரகங்களைத் தாக்கியதும் 2000இல் ஏமனில் யு.எஸ்.எஸ். கோல் என்னும் போர்க் கப்பலைத் தாக்கியதும் அண்மையில் அமெரிக்க இரட்டைக் கோபுரங்கள் மற்றும் பெண்டகனைத் தாக்கியதும் ஒசாமாவின் திட்டப்படி நடைபெற்றவையே என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

இவருடைய படையில் 5,000 பேர் உள்ளனர்.

உலகின் மற்றப் பகுதிகளைப் போலவே ஆப்கானிஸ்தானிலும் வரலாற்றுச் சக்கரம் முன்னோக்கிச் சுழலும் என்பதை மட்டுமே உறுதியாக நம்பலாம். ஆனால் இப்போது உடனடியாக தேவைப்படுவது இந்தப் போரில் அமெரிக்கா தோற்க வேண்டும், தலிபான்கள் வெல்ல வேண்டும். வேறு வழியில்லை.

### ஆப்கன் ஆப்கானியருக்கே

தலிபான்களை வீழ்த்திய பிறகு எத்தகைய அரசை நிறுவலாம் என்ற விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சனநாயகத்தின் பெயரால் எக்காளமிடும் அமெரிக்கா கிழடு தட்டிய முன்னாள் மன்னரை அழைத்துவர முயல்கிறது. மிதவாத தலிபான்களுக்குப் புதிய அரசில் இடமளிக்க முஷாரஃப் வலியுறுத்துகிறார். தலிபான்களைச் சேர்க்கும் பேச்சுக்கே இடமில்லை என்கிறார் வாஜ்பேயி. ஆப்கானிஸ்தானில் இப்போதுள்ள அரசை மாற்றவும், புதிய அரசை அமர்த்தவும், அந்தப் புதிய அரசின் இயைபைத் தீர்மானிக்கவும் இவர்களெல்லாம் யார்? அமெரிக்க அயலுறவுத் துறை அமைச்சரைத் தலிபான் தெரிந்தெடுக்க முடியுமா? தேசிய சனநாயகக் கூட்டணியின் அமைச்சரவையில் இடம்பெற வேண்டிய கட்சிகளை தலிபான் முடிவு செய்யலாமா? ஏழை நாடு என்றாலும் எவருக்கும் பணி யாது ஆப்கன் தேசம். அது தன் இறையாண்மையை அமெரிக்காவிடமோ, இந்தியாவிடமோ, பாகிஸ்தானிடமோ ஒருபோதும் விட்டுத் தராது.

ஆப்கனுக்கு எதிரான அமெரிக்காவின் போருக்கு உலகமே ஆதரவு கொடுப்பது போல் தொடக்கத்தில் ஒரு தோற்றம் உண்டாக்கப்பட்டது. வெகு விரைவில் அது மறைந்து விட்டது. 'பயங்கரவாத எதிர்ப்பின்' உண்மை நோக்கம் நாளுக்கு நாள் தெளிவாகிக் கொண்டிருக்கிறது. பத்து டாலர் மதிப்புள்ள கூடாரங்கள் மீது பல கோடி மதிப்புள்ள ஏவுகணைகளை ஏவுவதில் பொருளில்லை என்று பேசிக் கொண்டிருந்த புஷ் இப்போது அதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்.

அமெரிக்காவின் அதிநவீனப் போர் வானூர்திகள் வீசும் பயங்கரக் குண்டுகளும் போர்க் கப்பல்களி



படிப்பகம்

www.padippakam.com

லிருந்து சீறிச் செல்லும் ஏவுகணை களும் தாக்கித் தகர்ப்பதற்கான போரியல் இலக்குகள் எதுவும் ஆப்கானிஸ்தானில் இல்லை என்பதே உண்மை. ஆயுதத் தொழிற் சாலையோ வேறுவகைத் தொழிற் சாலையோ ஒன்றும் கிடையாது. அப்படி ஏதாவது இருந்திருந்தாலும் இந்நேரம் அவை அனைத்தும் தரைமட்டமாகியிருக்க வேண்டும்.

ஆப்கானிஸ்தானில் மூன்றாண்டு களுக்கு மேலாகக் கடுமையான வறட்சி நிலவி வருகிறது. பன்னாட்டு உதவி நிறுவனங்கள் வழங்கும் தானியத்தைக் கொண்டுதான் ஆப்கன் மக்கள் உயிர் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். உலக உணவுத் திட்டம் (WFP) செப்டெம்பர் 11க்கு முன்பு இந்தப் பணியில் ஈடுபட்டிருந்தது. வான்தாக்குதல் தொடங்கியவுடன் அது நாட்டை விட்டே வெளியேறி விட்டது. மற்ற உதவி நிறுவனங்களும் வெளியேறிவிட வேண்டுமென அமெரிக்கா சொல்லி விட்டது.

விளைச்சலும் இல்லாமல் வெளியிலிருந்து தானிய வரத்தும் இல்லாமல் ஆப்கன் மக்கள் பட்டினியால் கொத்துக் கொத்தாய்ச் செத்து விழும் நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. இதற்கு அமெரிக்க அரசின் விடை வானி லிருந்து உணவுப் பொட்டலங்களை வீசுவதாகும். இவ்வழியில் பட்டினிச் சாவுகளைத் தடுத்து விட முடியாது என்பது மட்டுமல்ல, இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிற வேலையுமாகும். அமெரிக்கா ஐந்து லட்சம் உணவுப் பொட்டலங்களை வீசத் திட்டமிட்டிருக்கிறதாம். இது உண்மையென்றாலும் கூட யானைப் பசிக்குச் சோளப் பொரிதான். பல்லாயிரம் அடி உயரத்திலிருந்து போடப்படும் உணவுப் பொட்டலங் கள் தலையில் விழுந்தால் உயிரைப் பறித்து விடும் ஆபத்தும் உள்ளது. மேலும் பரவலாக வீசப்படும் உணவுப் பொட்டலங்களைப் பொறுக்கி எடுக்கச் செல்கிறவர்கள் நிலக் கண்ணி வெடிகளில் சிக்கி மடியும் ஆபத்தும் உள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக, இது ஆப்கன் மக்களை இழிவுபடுத்தும் நடவடிக்கை.

## அமெரிக்கா தொடுத்த போர்கள்

*இரண்டாம் உலகப் போருக்குப் பின் அமெரிக்கா இன்று வரை எந்த எந்த நாடுகளுடனெல்லாம் போர் புரிந்துள்ளது, எந்த எந்த நாடுகள் மீதெல்லாம் குண்டு வீசியுள்ளது என்ற பட்டியலை அருந்ததிராய் தருகிறார் :*

*சீனம் (1945 - 46, 1950-53); கொரியா (1950-53); குவாதிமாலா (1954, 1967-69); இந்தோனேஷியா (1958); கியூபா (1959-60); பெல்ஜியக் காங்கோ (1964); பெரு (1965); லாவோஸ் (1964-73); வியத்நாம் (1961-73); கம்பூசியா (1969-70); கிரனடா (1983); லிபியா (1986); எல் சல்வடார் (1980கள்); நிக்காரகுவா (1980கள்); பனாமா (1989); இராக் (1991-99); போஸ்னியா (1995); சூடான் (1998); யூகோஸ்லாவியா (1999); இப்போது ஆப்கானிஸ்தான்.*

நியூயார்க் நகரத்தின் மீது தலிபான் குண்டு வீசி விட்டு ஆப்கன் கொடி பொறித்த உணவுப் பொட்டலங்களை அமெரிக்காவின் மீது வீசினால் எப்படி இருக்கும்? என்று அருந்ததி ராய் கேட்கிறார். ஏனென்றால் ஆப்கன் மீது வீசப்படும் குண்டுகளில் போலவே உணவுப் பொட்டலங் களிலும் அமெரிக்க அடையாளம் பொறிக்கப்பட்டுள்ளது.

கொடிதிலும் கொடிதான ஆப்கன் குளிர்காலம் நெருங்கிக் கொண்டிருக் கிறது. அது தொடங்குவதற்கு முன் போர் முடியவில்லை என்றால், பன்னாட்டு உதவி நிறுவனங்களின் தானிய வழங்கல் மீட்டமைக்கப்பட வில்லை என்றால், குளிர் காலம் முடிவதற்குள் இலட்சக் கணக்கானவர் கள் பட்டினியால் செத்து மடிவதைத் தவிர்க்க முடியாது. ஒருவேளை ஆப்கன் மக்களின் துயரத்துக்கு இப்படித்தான் முடிவு கட்ட விரும்புகிறதோ அமெரிக்க அரசு?

### இந்திய நிலை

ஆப்கன் தேசத்தைத் தரைமட்ட மாக்கும் அமெரிக்க முயற்சிக்குப் பாகிஸ்தானுடன் போட்டி போட்டுக் கொண்டு இந்தியாவும் நிபந்தனை யற்ற ஆதரவு தெரிவித்தது. அமெரிக்கா தன் போர் முயற்சி களுக்கு இந்திய ஆட்சிப் பரப்பைப் பயன்படுத்திக் கொள்வதற்கே கூட அது வெட்கமின்றி அழைப்பு விடுத்தது. காலங்காலமாய்ப் பேசி வந்த உலக அமைதி, போர் மறுப்பு, கூட்டுச் சேராமை, ஏகாதிபத்திய எதிர்ப்பு எல்லாம் நியூயார்க் கோபுரங் களைப் போலவே சட்டென்று நொறுங்கி விழுந்து விட்டன. காஷ்மீர் மக்கள் மீது நடத்தி வரும் போரைப் பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் நியாயப்படுத்தி வரும் இந்திய அரசு இந்நிலைமையைப் பயன்படுத்தி அமெரிக்காவின் ஆதரவைப் பெற வும் பாகிஸ்தானைத் தனிமைப்படுத்த வும் படாதபாடு பட்டுக் கொண்டிருக் கிறது. அமெரிக்க அரசோ இந்தியா வுக்கும் பாகிஸ்தானுக்குமான இந்த முரண்பாட்டைத் திறம்படப் பயன்படுத்தித் தன் ஆக்கிரமிப்புப் போருக்கு வலுச் சேர்த்துக் கொண்டிருக்கிறது. இந்திய ஆளும் வர்க்க நலன்களின் தேவை என்ற அடிப்படைக் காரணத்தோடு பாரதிய சனதா கட்சியின் இந்துத்துவப் பார்வையும் சேர்ந்து கொண்டுள்ளது.

1998இல் கென்யாவிலும் டான்சானியாவிலும் அமெரிக்கத் தூதரகங்கள் குண்டுவீச்சுத் தாக்குத லுக்கு உள்ளானபோது, இதற்குப் பதிலடியாக சூடான் மீதும் ஆப்கானிஸ்தான் மீதும் அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களை வாஜ்பாய் அரசு முழுமையாக ஆதரித் தது. இதே போல் ஜம்மு-காஷ்மீரிலும் இந்தியாவின் பயங்கரவாத எதிர்ப்பு முயற்சிகளுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள அது மறக்கவில்லை.

அண்மையில் புஷ் கொண்டு வந்த தேசிய ஏவுகணைப் பாதுகாப்பு யோசனையையும் வாஜ்பாய் அரசு வரவேற்றது. அமெரிக்க-



படிப்பகம்

www.padippakam.com

## ஆப்கன் - நாடும் மக்களும்



*தலைநகர் காபூல். ஆப்கானிஸ்தான் மத்தியத் தெற்கு ஆசியாவில் அமைந்துள்ளது. நாட்டைச் சுற்றியும் நிலப்பரப்புதான். வடமேற்கு பாகிஸ்தான், கிழக்கு ஈரான், தெற்கு துருக்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் அதன் எல்லைகளாக அமைந்துள்ளன. எல்லையின் சிறு பகுதியில் மேற்குச் சீனம் உள்ளது.*

*நாட்டின் பரப்பளவு ஏறத்தாழ, 2,51,700 சதுர மைல்கள்.*

*இங்கு நான்கு இனக் குழுக்கள் உள்ளன.*

*பஷ்டுன்கள் - 38%*
*தாஜிக்குகள் - 25%*
*ஹசாராக்கள் - 19%*
*உஸ்பெக்குகள் - 6%*

*ஆப்கானிஸ்தான் மக்கள் தொகையில் 99 விழுக்காட்டினர் இஸ்லாமியர்கள்.*

*2001இல் மொத்த மக்கள் தொகை (மதிப்பீடு) 2,25,00,000.*

*உலகத்திலேயே மிக அதிகமான அளவில் 36,95,000 ஆப்கானியர்கள் அகதிகளாக உள்ளனர்.*

*ஓராயிரம் ஆப்கானியருக்கு ஒரு தொலைபேசி உள்ளது.*

*36 விழுக்காட்டினர் கல்வியறிவு பெற்றவர்கள். இதில் பெண்களின் விழுக்காடு 21 மட்டுமே.*

*உலகிலேயே மிக மோசமான சுகாதாரக் கேடுள்ள நாடு ஆப்கானிஸ்தான். அவர்களின் சராசரி வயது 43.*

*வெறும் 13 விழுக்காடு மக்களுக்கே குடிநீர் வசதியும் கழிப்பறை வசதியும் உள்ளன. (குடிநீரோ கழிப்பறை வசதியோ பாதுகாப்பானதாகவோ அல்லது தேவைப்படும் அளவுக்கோ கிடைக்க உத்தரவாதம் இல்லை).*

*குழந்தை இறப்பு மிக அதிகமாக நடக்கும் நாடுகளில் ஆப்கானிஸ்தான் நான்காம் இடத்தில் உள்ளது.*

*பிரசவத்தின் போது தாய்மார்கள் மிக அதிகமாக இறக்கும் நாடுகளில் இரண்டாம் இடத்தில் உள்ளது.*

*70 விழுக்காடு மக்கள் சத்துக் குறைவுடன் உள்ளனர்.*

இந்திய-இஸ்ரேல் அச்சு என்பது அயலுறவுத் துறையில் இந்துத்துவத்தின் ஆசைக் கனவுகளில் ஒன்று. பயங்கரவாதத்தை ஒழிப்பதில் இஸ்ரேலுடன் கூட்டு முயற்சிகளில் ஈடுபடுவது பற்றி இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி செப்டெம்பர் 11க்குப் பிறகு பல முறை பேசி விட்டார். இஸ்லாத்தை ஆபத்தாகக் கருதுவதில் இந்துத்துவமும் யூத சயோனிசமும் ஒத்துப் போகின்றன.

காஷ்மீர் சிக்கலுக்கு அடிப்படைக் காரணம் அத்தேசிய இன மக்களின் சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டு வருவதுதான் என்ற உண்மையை மறைத்து, எல்லை கடந்து வரும் பயங்கரவாதம் என்று பூச்சாண்டி காட்டுகிறது இந்திய அரசு. இந்த வகையில் தேசிய முன்னணி அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே அடிப்படை வேறுபாடு ஒன்றுமில்லை. காஷ்மீர் காஷ்மீரிகளுக்கே என்பதையும், அம்மக்கள் தங்கள் வருங்காலத்தைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ள உரிமை பெற்றவர்கள் என்பதையும் இந்தியத் தேசியத் தளத்தில் நிற்கிற யாரும் ஏற்றுக் கொள்வதில்லை.

இந்தியத் தேசியத் தளத்தில் செயல்படும் இடதுசாரிக் கட்சிகள் ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்காவின் பயங்கரவாதத் தாக்குதலை எதிர்த்த போதிலும், காஷ்மீரில் இந்தியாவின் அரச பயங்கரவாதத்தை நியாயப்படுத்துவதில் முன்னுக்கு நிற்கின்றன. தனிமனித பயங்கரவாதத்தை எதிர்ப்பதன் பெயரால் இக்கட்சிகள் அரச பயங்கரவாதத்தின் பக்கம் நிற்கின்றன.

### இஸ்லாமியத் தீவிரவாதம் ஏன்?

இஸ்லாமியத் தீவிரவாதம், இஸ்லாமியப் பயங்கரவாதம் என்றெல்லாம் எதுவும் இல்லை என்பதன்று நமது வாதம். இவை இருக்கத்தான் செய்கின்றன. முஸ்லீம் மதத்தின் அடிப்படையிலான தேசியமும் 'சர்வதேசிய'மும் வரலாற்று வழியில் தவறானவை. ஏனென்றால் தேசிய இனங்களும் தேசங்களும் மதத்தின் அடிப்படையில் உருவாவதில்லை. முஸ்லீம் தேசம் என்ற கருத்தின் அடிப்படையில்தான் பாகிஸ்தான் பிறந்தது. ஆனால் தேசிய இன அடிப்படையில் வங்காள தேசம் பிறந்ததை முஸ்லீம் மத உணர்ச்சியால் தடுக்க முடியவில்லை. இரு முஸ்லீம் நாடுகளான இராக்கும் ஈரானும் பத்தாண்டுப் போர் புரிந்தன. இன்றும்கூட ஆப்கன் முஸ்லீம்கள் மீது அமெரிக்கா குண்டு வீசுவதற்குப் பாகிஸ்தானிலும் சவுதி அரேபியாவிலும் வேறு பல நாடுகளிலும் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் முஸ்லீம் அரசுகள் துணைநிற்கக் காண்கிறோம். ஆப்கானிஸ்தானிற்குள்ளேயே



படிப்பகம்

www.padippakam.com

முஸ்லீம் தலிபானை ஒழிக்க அமெரிக்காவுக்குத் துணைநிற்கும் வடக்குக் கூட்டணியும் பெரும்பாலும் முஸ்லீம் மத அடிப்படையில் அமைந்ததே. இப்படிப் பல சான்றுகளைக் குறிப்பிடலாம். ஒரு தவறான கொள்கை என்ற போதிலும் இஸ்லாமியத் தீவிரவாதம் இந்த அளவுக்குப் பரவி வலுப்பெற்றிருப்பது எப்படி என்பதைப் புரிந்து கொண்டாக வேண்டும்.

ஆப்கானிஸ்தானை எடுத்துக் கொள்வோம். அங்கு மன்னராட்சி ஒழிந்து தாவூதின் சர்வாதிகார ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆப்கன் நகரப் பகுதிகளிலும் ஆப்கன் இராணுவத்தினர் இடையிலும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் மக்கள் ஜனநாயகக் கட்சிக்கும் கணிசமான செல்வாக்கு இருந்தது. அந்தக் கட்சிகளின் தலைமையில் ஒரு புரட்சி நடந்த போது உலகெங்கும் முற்போக்காளர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள்.

ஆனால் புரட்சியின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றியவர்களிடையே ஒற்றுமை இல்லை. முதலில் ஆட்சித் தலைவராக விளங்கிய நூர் முகமது தராக்கியைக் கொலை செய்து விட்டு அமீன் ஆட்சியைக் கைப்பற்றினார். பிறகு அமீனைத் தூக்கி எறிந்து விட்டு கர்மால் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தார். கடைசியாக நஜிபுல்லா பொறுப்பேற்றார். இவர்களுக்கெல்லாம் சோவியத்து ஒன்றிய அரசின் ஆதரவு இருந்தது.

பிரஷ்னேவ் தலைமையிலான சோவியத்து அரசின் தவறான வழிகாட்டுதலால் புதிய ஆப்கன் அரசு புற நிலைமைகளைக் கணக்கில் கொள்ளாமல் அவசர கோலமாய் சீர்திருத்தங்கள் செய்ய முற்பட்டனர். பழமைப் பிடிப்பும் மதப் பற்றும் நிறைந்த ஆப்கன் மக்களைப் பக்குவமாக அணுகத் தவறியதால், புரட்சியின் பகைவர்கள் எளிதில் அம் மக்களைத் திரட்டிக் கொண்டார்கள். மக்கள் எதிர்ப்பை ஒடுக்குவதற்காக சோவியத்து இராணுவம் வரவழைக்கப்பட்டது. ஆப்கன் மக்கள்



என்று முடியும் இந்த அகதி வாழ்வு...?

அதனைத் தங்கள் தேசத்தின் மீது படையெடுத்த அயல்நாட்டுப் படையாகக் கருதியதில் தவறில்லை. வியத்னாம் தோல்விக்குப் பழிதீர்க்கவும் ஆப்கானிஸ்தானில் தன் மேலாதிக்கத்தை மீட்டமைக்கவும் அமெரிக்க அரசு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டது.

ஆப்கன் மக்கள் சோவியத்து கம்யூனிசத்தைத் தங்களுக்கு எதிரானதாகக் கருதும் நிலை உருவாயிற்று. அவர்களை ஒன்றுபடுத்த இஸ்லாமிய மத உணர்ச்சி பயன்பட்டது. ஒசாமா பின் லாடன் போன்றவர்கள் சோவியத்துப் படைக்கு எதிராகப் போர் புரிந்தார்கள். அமெரிக்க அரசு தன் அப்போதைய தேவை கருதி முஸ்லீம் தீவிரவாதத்துக்குத் தீனி போட்டு வளர்த்தது. பின்லாடனுக்கே கூட அமெரிக்க சி.ஐ.ஏ. உளவு நிறுவனம் பயிற்சி அளித்ததாகக் கூறப்படுகிறது.

முஸ்லீம்கள் மிகப் பெரும்பான்மையாக வாழக் கூடிய பல நாடுகளில் பிற்போக்கு அரசுகளுக்கு அன்றைய சோவியத்து அரசு தன் புவிசார் அரசியல் நலன் கருதித் துணைநின்றது. இதில் தேசியமும் இல்லை, சர்வ தேசியமும் இல்லை. இதனால் இந்தப் பிற்போக்கு அரசுகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த மக்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு சோசலிசத்தின் மீது நாட்டம் வரவில்லை. இந்நிலையில் மார்க்சியம் அவர்களை ஈர்க்கவில்லை. அந்த இடத்தை இஸ்லாமியத் தீவிரவாதம் கைப்பற்றியது. மதவாதத்துக்கு அவ்வளவாய் இடம் கொடுக்காத



படிப்பகம்

www.padippakam.com

எகிப்து, அல்ஜீரியா போன்ற நாடுகளிலும் கூட இஸ்லாமியத் தீவிரவாதம் இப்படித்தான் வளர்ந்தது.

கம்யூனிச எதிர்ப்பு என்ற அடிப்படையில் இந்தத் தீவிரவாதம் குறித்து அமெரிக்கா மகிழ்ச்சியுற்றது. அதற்கு ஊக்கமும் ஆதரவும் கொடுத்தது. சோவியத்து முகாம் தகர்வுற்ற பின் முஸ்லீம் தீவிரவாதத்தின் கவனம் அமெரிக்காவின் பக்கம் திரும்பியது. இந்தப் பின்னணியில்தான் ஒசாமா பின் லாடனின் அல் காய்தா போன்ற அமைப்புகள் பிறந்தன. பல இடங்களில் அமெரிக்க மற்றும் மேற்கத்திய நலன்கள் மீது பயங்கரவாதத் தாக்குதல்கள் நடைபெற்றன. 1994இல் பாரீஸ் நகரத்தில் ஒரு வானூர்தியைக் கடத்திச் சென்று ஈஃபிள் கோபுரத்தைத் தாக்கித் தகர்க்கும் முயற்சி வெற்றி பெறவில்லை.

இஸ்லாமியத் தீவிரவாதிகளில் ஒரு பகுதியினர் தங்கள் மதத்தின் அடிப்படையில் ஆசியப் பேரரசு ஒன்றை நிறுவ விரும்புகின்றனர். இவர்களுக்குத் தேசிய விடுதலைப் போராட்டங்கள் என்பவை - செசன்யா முதல் காஷ்மீர் வரை - இந்த அனைத்தாசிய இஸ்லாமியக் கூட்டரசுக்கான போராட்டத்தின் கூறுகளே ஆகும். காஷ்மீரை இந்தியாவிடமிருந்து மீட்டு பாகிஸ்தானுடன் இணைப்பது, பிறகு பாகிஸ்தானையும் இஸ்லாமியப் பேரரசில் இணைத்து விடுவது இவர்களின் திட்டம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இவர்கள் பயங்கரவாதத்தைக் கையில் எடுத்துள்ளார்கள்.

இவர்களுக்கு அமெரிக்க அரசின் மீதிருக்கும் வெறுப்பும் சீற்றமும் நியாயமானவை. இந்த வெறுப்பும் சீற்றமும்தான் பயங்கரவாத நடவடிக்கைகளாக வெளிப்படுகின்றன. இந்தத் தனி மனித பயங்கரவாதம் ஆபத்தானதே என்றாலும் அரச பயங்கரவாதத்தின் எதிர் விளைவே என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தேசிய விடுதலைக்கும் புரட்சிகர சனநாயகத்துக்கும் சமூகநீதிக்குமான மக்கள் போராட்டங்களே மதத் தீவிர வாதத்துக்கும் பயங்கரவாதத்துக்கும் சரியான தீர்வாக இருக்க முடியும்.

தனிமனித பயங்கரவாதம், அரச பயங்கரவாதம் இரண்டையுமே ஏற்பதற்கில்லை. ஆனால் இரண்டுக்கும் இடையே அடிப்படை வேறுபாடு ஒன்றுள்ளது. தனிமனித பயங்கரவாதம் அடக்கி ஒடுக்கப்பட்டவனிடமிருந்து வெளிப்படுவது என்றால் அரச பயங்கரவாதமோ அடக்கி ஒடுக்கும் கருவியாக உள்ளது.

தனிமனித பயங்கரவாதம் ஓர் அறிகுறியே தவிர அதுவே நோயன்று. எனவே அடக்கு முறையும் படையெடுப்பும் அதற்கு மருந்தாக மாட்டா. அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல், இந்தியா, பாகிஸ்தான், சிறிலங்கா போன்ற அரசுகளுக்கு இது தெரியாததன்று. அவை தனிமனித பயங்கரவாதத்தைச் சாக்கிட்டு மக்கள் போராட்டங்களையும் சனநாயக உரிமைகளையும் நசுக்கவே முற்பட்டுள்ளன. இந்த அடக்குமுறையின் பன்னாட்டு வெளிப்பாடாகவே இப்போதைய கொடும் போர் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மக்கள் மீதான சுமைகளை மென்மேலும் அதிகப்படுத்தவும் அவர்கள் போராடுவதற்கான வாய்ப்பு வழிகளை ஒடுக்கிக் குறுக்கவுமே இந்த நெருக்கடிச் சூழலை இவ்வரசுகள் பயன்படுத்திக் கொள்கின்றன.

உலகமயமாக்கம் சந்தையிலிருந்து இன்று சண்டைக்கும் சட்டங்களுக்கும் கூட நீண்டிருக்கிறது. அரச பயங்கரவாதத்தின் இந்த உலகமயமாக்கலைத் தடுத்து நிறுத்தவும் முறியடிக்கவும் வேருடன் களையவும் தேசந்தோறும் மக்கள் திரண்டெழுந்து போராடுவது ஒன்றே வழி! ■

## தமிழர் தன்மானப் பேரவை அரங்க மாநாடு - பொதுக்கூட்டம்

*தமிழர் தன்மானப் பேரவையின் அரங்க மாநாடு, சென்ற செப்டெம்பர் 29ஆம் நாள் திருவாரூர் வி.கே.எம். திருமண மண்டபத்தில் நடைபெற்றது. தோழர்கள் ஏ.ஜி. கஸ்தூரிரெங்கன், காமராஜ், மு. சேக் தாவூத் ஆகியோரடங்கிய தலைமைக் குழு மாநாட்டை வழிநடத்தியது.*

*கருநீலச் சீருடை அணிந்த தொண்டர் படையினரின் கொடி வணக்கத்துடன் மாநாடு தொடங்கியது. தமிழ்த் தேசிய இனம் முகங்கொடுக்க வேண்டியுள்ள பல்வேறு சிக்கல்கள் குறித்தும் விவாதித்து தீர்மானங்கள் இயற்றப்பட்டன. மாநாட்டின் நிறைவாக 'அமைப்பின் தேவை' என்பது குறித்து த.த.இ. பொதுச் செயலாளர் தோழர் தியாகு உரையாற்றினார். மாலையில் எழுச்சிமிக்க ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றன. பொதுக்கூட்டத்தில் 'போர் முரசு' கலைக் குழுவினரின் பாடல்கள், இளைய தலைமுறையின் 'என் ஐந்து உறுதிகள்' முதலான நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இறுதியில் தோழர் ஏ.ஜி. கஸ்தூரிரெங்கன் தீர்மான விளக்கவுரையாற்றினார். தோழர் தியாகு 'தமிழ்த் தேசிய விடுதலையும் சமூக நீதியும்' என்ற தலைப்பிலும், த.தே.பொ.க. பொதுச் செயலாளர் தோழர் பெ. மணியரசன் 'தேர்தல் புறக்கணிப்பு' என்ற தலைப்பிலும் கருத்துரையாற்றினர்.*

## தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சிறப்புப் பொதுக்குழு

*தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் நான்காம் சிறப்புப் பொதுக்குழு சென்ற அக்டோபர் 27, 28 நாட்களில் தஞ்சை மாவட்டம், செங்கிப்பட்டி அருகே சாணூரப்பட்டியில் நடைபெற்றது. பொதுக்குழுவின் நிறைவாக 28ஆம் நாள் மாலை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் க. பழனிமாணிக்கம் தலைமையில், தோழர்கள் பெ. மணியரசன் (த.தே.பொ.க.), தியாகு (த.த.இ.), ஏ.ஜி. கஸ்தூரிரெங்கன் (த.த.பே.), வாலாசா வல்லவன் (மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி) மற்றும் பல தோழர்கள் உரையாற்றினார்கள்.*



படிப்பகம்

www.padippakam.com

# தோழர் தணிகைச் செல்வனுக்கு மறுப்பு

# திரை திரைதான் கோடு கோடுதான்

'தன்னுரிமை' விவாதத்தின் ஒரு பகுதியாக கவிஞர் தணிகைச் செல்வன் எழுதியுள்ள 'தமிழ்த் தேசம் கூறும் தன்னுரிமையும் தமிழ்த் தேசம் கோரும் தன்னுரிமையும்' என்ற தலைப்பிட்ட கட்டுரை 'தமிழர் கண்ணோட்டம்' 2001 ஏப்ரல்-மே இதழில் வெளி வந்துள்ளது.

'தன்னுரிமை' என்ற சொல்லாக்கத்தைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஏற்றுக் கொள்ள வில்லை என்பதையும், சுயநிர்ணய உரிமை என்பதை அவர் தன்னுறுதி உரிமை என்றே தமிழாக்கம் செய்தார் என்பதையும் என் விவாதக் குறிப்பில் நான் சுட்டிக் காட்டியிருந்தேன். இதற்குத் தணிகை இவ்வாறு விடையளிக்கிறார் :

''பாவலரேறு பெருஞ்சித்திரனார் தன்னுரிமைக்கு **மாற்றுச் சொல்லாகத்** தன்னுறுதி உரிமை என்பதை ஆலோசனைக்காக வைத்தாரே ஒழிய மாற்றத்தை மாநாட்டில் **வற்புறுத்தவில்லை.**'' *(அழுத்தம் எனது.)*

பெருஞ்சித்திரனார் தன்னுறுதியுரிமை என்பதைத் தன்னுரிமைக்கு மாற்றுச் சொல்லாக அல்ல, மறுப்புச் சொல்லாகத்தான் முன்வைத்தார் என்பது தணிகைக்கே நன்கு தெரியும். *1990* பிப்ரவரியில் சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற தன்னுரிமை மாநாட்டில் பெருஞ்சித்திரனார் ஆற்றிய உரையை என்னைப் போலவே தணிகையும் நேரில் கேட்டவர். பாவலரேறு இப்படித்தான் சொன்னார்: ''தன்னுரிமை என்று சொல்லக் கூடாது. தன்னுறுதியுரிமை என்றுதான் சொல்ல வேண்டும்.''

ஆலோசனைக்காக ஒரு மாற்றுச் சொல்லை முன்வைக்கிற எவரேனும் இப்படிப் பேசுவார்களா? இந்த மாற்றத்தைப் பெருஞ்சித்திரனார் அந்த மாநாட்டில் வற்புறுத்துவதாக இருந்தால் என்ன செய்திருக்க வேண்டும் என்று தணிகை எதிர்பார்க்கிறார்?

தன்னுரிமையா? தன்னுறுதியுரிமையா? என்ற விவாதத்தைப் பாவலரேறு அந்த மாநாட்டு உரையோடு முடித்துக் கொள்ளவில்லை என்ற செய்தியைத் தணிகைக்கு நான் நினைவுபடுத்தியாக வேண்டும். மாநாடு நடந்த நாள் *1990* பிப்ரவரி *25*, பிப்ரவரி 28 நாளிட்ட தமிழ்நிலம் ஏடு அம்மாநாடு தொடர்பாக வெளியிடப்பட்ட 'தமிழ்த் தேசத் தன்னுரிமை' வெளியீட்டைச் சுருக்கி வெளியிடத் தொடங்கியது (இதழ் எண் *135*).

ஏட்டின் ஆசிரியர் பெருஞ்சித்திரனார் அவ் வெளியீட்டின் தலைப்பையே 'தமிழ்த் தேசியத் தன்னுறுதி' என மாற்றி விட்டது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்ல, தலைப்பு தொடர்பாக ஓர் அடிக்குறிப்பும் தரப்பட்டுள்ளது. அந்த அடிக்குறிப்பு இதுதான் : ''Self-determination' என்கிற ஆங்கிலச் சொல்லுக்கு 'சுயநிர்ணய உரிமை' என வடமொழியில் பெயர்த்துப் பயன்படுத்தினர் பார்ப்பனப் பொதுவுடைமையர். அதையே இக்கால் 'தன்னுரிமை' என இவ்வெளியீடு மொழி பெயர்த்துள்ளது. இந்திய ஒன்றியம் என ஒன்றுடன் கூட்டமைத்துக் கொள்கிற உறவுடன் தமிழ்நாட்டு அரசியலமைப்பு - அனைத்து மட்டங்களிலும் தன் 'உரிமை' கொள்ளுகிற அமைப்பாக இருக்க முடியாது. அது ஒரு கூட்டரசிடமிருந்து பிரிந்து போக உரிமையுள்ள நிலையில் தன்னை உறுதி செய்து கொள்ளும் 'தன்னுறுதி' அமைப்பாக மட்டுமே இருக்க முடியும்.'' காரணம் எதுவாயினும், 'தன்னுரிமை' என்பதைப் பாவலரேறு உறுதியாக மறுத்துரைக்கக் காண்கிறோம். இதை மாற்றுச் சொல்லுக்கான ஆலோசனை என்று எப்படி வர்ணிக்க முடியும்? தணிகைதான் விளக்க வேண்டும்.

தமிழ் நிலம் ஏடு தன்னுரிமை மாநாட்டையே 'தமிழ்த் தேசியத் தன்னுறுதி மாநாடு' என்றுதான் குறிப்பிட்டது. 'தமிழ்த் தேசியத் தன்னுறுதி' என்ற தலைப்பில் மாநாட்டு வெளியீட்டை அது தொடர்ந்து மூன்று இதழ்களில் வெளியிட்டது (இதழ் எண் *135*, *136*, *137*). தன்னுரிமை ஏன் என்பது அந்த வெளியீட்டின் தொடக்கம். தமிழ் நிலம் இதனைத் 'தன்னுறுதி (Self-determination) ஏன்?' என்று மாற்றிக் கேட்டது. கட்டுரைத் தொடர் நெடுகிலும் பல இடங்களில் இதே போன்ற மாற்றம் செய்யப் பட்டுள்ளது. சில இடங்களில் இந்த மாற்றம் செய்யாமல் விடப்பட்டுள்ளது என்றாலும், இதற்குக் குறிப்பான நோக்கம் எதுவுமில்லை.

தன்னுரிமை என்ற சொல்லாக்கத்தில் தணிகைக்கு உறுதியான நம்பிக்கை இருக்குமானால், பாவலரேறு சொன்னாலும் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று வாதிட வேண்டுமே தவிர, 'மாற்றுச் சொல்', 'ஆலோசனை', 'வற்புறுத்தவில்லை' என்றெல்லாம் பூசிமெழுகக் கூடாது.

இந்த நீண்ட விவாதத்தில் நான் ஒரு சொல் மாற்றத்தைக் கோருவதற்கு மேல் வேறொன்றும் செய்து விடவில்லை என்று தணிகை குறைபட்டுக் கொள்கிறார். இந்த விமர்சனத்துக்கு நான் முன்பே பதிலளித்திருக்கிறேன். கருத்துத் தெளிவுக்கு ஒரு சொற்குழப்பம் தடையாக வரும்போது அந்தக்



படிப்பகம்

www.padippakam.com

குழப்பத்தை நீக்காமல் வேறொன்றும் செய்ய முடியாது. ஆனால் இந்த விவாதத்தில் நான் வேறொன்றும் பேசவேயில்லை என்று தணிகை குறைபட்டுக் கொள்வதற்கு நியாயமில்லை. தன்னுரிமை விவாதக் குறிப்பை அடுத்து சமூக நீதி - ஒரு விவாதக் குறிப்பு என்ற தலைப்பில் தமிழ்த் தேசம் இதழில் நான் எழுதியதை அவர் படிக்கவில்லையோ? இப்போதாவது அவர் அந்தக் குறிப்பைப் படித்து விட்டுத் தன் கருத்தை எழுதினால் பயனுள்ளதாக இருக்கும்.

சுயநிர்ணயம் என்ற சொல்லை சுயநிர்ணய உரிமை என்ற பொருளிலும் லெனின் பயன்படுத்தியிருக்கிறார் என்ற வாதத்துக்கு நான் ஏற்கெனவே தக்க சான்றுகளுடன் விரிவாக விடையளித்து விட்டேன். என் விடை தணிகைக்கு நிறைவளித்ததா? தெரியவில்லை. மீண்டும் சொல்கிறேன். ஒரு சொல்லை அதற்குரிய பொருளில் மட்டுமல்லாமல் வேறொரு பொருளிலும் ஆள முடிகிறது என்பதாலேயே அவ்விரண்டு சொற்களுக்கும் பொதுவாக ஒரே சொல்லை வைத்துக் கொள்ளலாம் என்றாகி விடாது. அப்படி வைத்துக் கொள்வதற்கு இரண்டும் முழுதொத்தவையாக இருக்க வேண்டும். இரண்டுக்கும் இடையே கிஞ்சிற்றும் பொருள் வேறுபாடு இருக்கக் கூடாது. சுயநிர்ணயம் என்பதற்கும் சுயநிர்ணய உரிமை என்பதற்கும் எந்த வேறுபாடும் இல்லை. இரண்டும் எல்லாவிடத்தும் முழுதொத்தவையே என்ற நிலை இருந்தால் மட்டுமே இரண்டுக்கும் பொதுவாகத் தன்னுரிமை என்ற சொல்லைப் பயன்படுத்த முடியும்.

தோழர் தணிகை சுயநிர்ணயம் என்ற சொல்லுக்குள் சுயநிர்ணய உரிமை என்ற பொருளும் அடக்கம் என்று காட்டுவதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பின் சாசனத்தை எடுத்துக் காட்டுகிறார். ஆனால் இரண்டும் முழுதொத்தவை என்று அவராலேயே நிறுவ முடியவில்லை. மாறாக, அவர் சொல்கிறார் :

''ஓர் அரசோ தேசிய இனமோ சுயநிர்ணயத்துக்காகப் போராடுகிறார்கள் என்றாலும், சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகிறார்கள் என்றாலும், ஒரே பொருள்தான் என்று ஐ.நா. கருதுவதற்கான காரணம் இன உரிமைக்கான போரும் இன விடுதலைக்கான போரும் **தந்திரங்களில் வேறுபடுமே ஒழிய சாரத்தில் ஒன்றுதான்.''** *(அழுத்தம் எனது).*

இரண்டும் ஒன்றுதான் என்ற வாதம் மெல்லத் தேய்ந்து 'சாரத்தில் ஒன்றுதான்' என்றாகியுள்ளது. தந்திரங்களில் மட்டும்தான் வேறுபாடு என்பதை ஏற்றுக் கொண்டாலும், அந்த வேறுபாடு நம் சொல்லாட்சியில் வெளிப்பட வேண்டுமா? வேண்டாமா?

சுயநிர்ணயத்துக்கான போராட்டத்தை இன விடுதலைக்கான போர் என்றும் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை இன உரிமைக்கான போர் என்றும் தணிகை புரிந்து கொள்வதாகத் தெரிகிறது. அவரே சொல்கிறார் :

''விடுதலைக்கான உரிமைக்கும் விடுதலைக்கும் இடையே இருப்பது ஒரு மெல்லிய திரைதான். ஜனநாயகப் புரட்சி சோசலிசப் புரட்சியாக மாறுவதற்கு நடுவே உள்ள இடைவெளி ஒரு மெல்லிய கோடுதான் என்று லெனின் கூறியதை இங்கே நினைவு கூர்வது பொருந்தும்.''

மெல்லிய திரை என்றாலும் திரைதான், மெல்லிய கோடு என்றாலும் கோடுதான். மெல்லியது என்பதற்காக திரையைக் கிழிக்கவும் முடியாது. கோட்டை அழிக்கவும் முடியாது. திரை, கோடு எதுவும் இல்லையென்று நம் வசதிக்கு வைத்துக் கொள்ளவும் முடியாது. ஜனநாயகப் புரட்சிக்கும் சோசலிசப் புரட்சிக்கும் இடையில் மெல்லிய கோடுதான் உள்ளது என்பதற்காக இந்த இருவேறு புரட்சிக் கட்டங்களையும் ஒன்றாய்ச் சேர்த்து ஒரே சொல்லால் குறிக்க முயன்றால் என்னாகும்?

தணிகை எழுதுகிறார்: ''இந்தப் பின்னணியில்தான் தன்னுரிமை என்ற கூட்டுச் சொல்லின் பொருத்தப்பாடு முக்கியத்துவம் பெறுகிறது. தமிழ்த் தேச உரிமைக்கான தன்னுரிமைப் போர் என்றும் தமிழ்த் தேச விடுதலைக்கான தன்னுரிமைப் போர் என்றும் இருவேறு பொருள்களை இருவேறு கால கட்டங்களில் உணர்த்துவதாக அச்சொல் இருக்கும்.''

இருவேறு பொருள்களை, இருவேறு கட்டங்களை ஒரே சொல்லால் குறிக்க வேண்டிய அந்த இன்றியமையாத் தேவை என்ன என்பதை மட்டும் தணிகை சொல்லவே இல்லை. எது எப்படியோ, தன்னுரிமையும் விடுதலையும் ஒன்றுதான் என்று அவர் வாதிடவில்லை. தன்னுரிமை என்ற சொல் பொருத்தமுடையதுதான் என்பதை இலக்கண அடிப்படையில் நிறுவும் முயற்சியில் கவிஞர் இறங்குகிறார். Macro Economics என்ற இரு சொற்கள் Macronomics என்றும் Mathematical Science என்பது Mathscience என்றும் Bio Mechanics என்பது Bionics என்றும் சுருங்கியிருப்பதை அவர் எடுத்துக் காட்டுகிறார். தமிழ் மரபிலும் இத்தகைய சொற் சுருக்கங்கள் உண்டென்று சொல்லி, விடியலில் தோன்றும் வெள்ளி விடிவெள்ளி என்று சுருங்கியிருப்பதைச் சுட்டுகிறார்.

விடியல் + இல் = விடியலில் என்றாகிறது. இதில் இல் என்பது ஐந்தாம் வேற்றுமை உருபு என்கிறார் கவிஞர். (ஐந்தாம் வேற்றுமை உருபா? அல்லது ஏழாம் வேற்றுமை உருபா?) 'விடிவெள்ளி' என்பதை ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை என்று விளக்குகிறார்.

இதே போல் தன்னுரிமை என்ற சொல் 'ஆறாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை' என்று விளக்கமளிக்கிறார்.

இந்த விளக்கத்தின்படி தன்தீர்வுஉரிமை, தன்முடிவுரிமை போன்ற தொடர்களின் தலைச் சொல்லையும் கடைச்சொல்லையும் இணைத்தால் தன்னுரிமையாவதாகச் சொல்கிறார். என்னுடைய கேள்வி இதுதான் : தன்னிறைவு உரிமை, தன்னுதவி உரிமை, தற்சார்பு உரிமை முதலான சொற்களையும் கூட தன்னுரிமை என்று சுருக்கலாம் அல்லவா? தற்கொலை உரிமையும் கூட தன்னுரிமை ஆகாதா? 'ஆறாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை' என்ற இலக்கணத்தின்படி இவையெல்லாம் சரிதானே?

விடிவெள்ளி என்பது விடியலில் தோன்றும் வெள்ளியை மட்டுமே குறிக்கும். அது வேறு எதையும் குறிக்காதென்று அறுதியிட்டுச் சொல்ல



படிப்பகம்

www.padippakam.com

முடியும். ஆனால் தன்னுரிமை அப்படியன்று. அது தன்தீர்வு உரிமையை மட்டும்தான் குறிக்க வேண்டும் என்று தணிகையால் ஆணையிட முடியாது. காய்தல் உவத்தல் தவிர்த்துப் பார்த்தால் அவருக்கே இது விளங்கும் - குறிப்பாக உவத்தலை.

ஒன்றரையாண்டுக் கால விவாதத்தில் சுயநிர்ணயம், சுயநிர்ணய உரிமை என்ற சொற்களின் பொருளாய்வு என்ற ஒற்றைப் பரிமாணத்தை மட்டுமே நான் முன் வைத்திருப்பதாகவும், புரட்சிக்கான புதிய பரிமாணங்கள் எதையும் இந்த விவாதக் கொடையாக வழங்கவில்லை என்றும் தணிகை வருந்துகிறார். புரட்சிகர சமூக நீதி, தமிழ்த் தேசியத்துக்கும் சமூக நீதிக்குமான இடையுறவு, தமிழ்த் தேசிய சமூக நீதிக் கருத்தியல், தமிழ்த் தேசிய சமூக நீதிக் குடியரசு... இவை குறித்தெல்லாம் நான் எழுதியவற்றைத் தணிகை படிக்கவேயில்லையா?

''தமிழ் தமிழர் இயக்கத்துக்கும் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சிக்கும் உள்ள நோக்கங்களில் பெரும்பாலானவை இரு இயக்கங்களும் ஏற்கும் பொதுத்தன்மை கொண்டவை. அவற்றை அடையாளங்கண்டு இரு அமைப்புகளும் ஒத்த நோக்குடைய பிற அமைப்புகளை இணைத்துக் கொண்டு பொதுப் போராட்டத்துக்கான பொதுத் திட்டத்தை வரையலாம்... சேர்ந்தியங்கும் போது கிட்டுகிற புதிய வலிவும் தமிழ்த் தேசிய சக்திகளின் ஈர்ப்பு மையமாகத் திகழும்.'' தோழர் தணிகைச் செல்வனின் இந்த வேண்டுகோளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறோம். அவரது நம்பிக்கையை முழுமையாகப் பகிர்ந்து கொள்கிறோம்.

இந்தக் கட்டுரையை முடிக்குமுன் தணிகையிடம் ஒரு வினாத் தொடுத்தாக வேண்டும். 'தன்னுரிமை' பெற்ற தமிழ்த் தேசிய இனம் எப்படியெல்லாம் இருக்க முடியும் என்ற வாய்ப்புகளைப் பட்டியலிடும் போது அவர் இப்படிச் சொல்கிறார் :

''தன்னுரிமை பெற்ற தென்னிந்தியத் தேசங்கள் சேர்ந்து ஒரு திராவிடக் கூட்டரசையோ திராவிட ஒன்றியத்தையோ நிறுவிக் கொள்ளலாம்...''

கவிஞரே, இது என்ன கூத்து? தென்னிந்தியத் தேசங்கள் சேர்ந்தால் திராவிடமாகி விடுமா? மொழிவழி பிரிந்து இனவழி கூடுவோம் என்று ஒரு காலத்தில் முழங்கப் பெற்ற பொய்மைக்குப் புத்துயிர் கொடுக்கலாமா நீங்கள்? ■

# மறக்க முடியாத அக்டோபர் 30

**1995 அக்டோபர் 30.**

யாழ்ப்பாணத்தைச் சிங்கள ராணுவம் நெருங்கிக் கொண்டிருந்த அக்கொடிய நாளில், பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் ஊரை விட்டுப் புறப்பட்ட அந்த 'இடப் பெயர்வு' உலகவரலாற்றில் இதுவரை ஒலிக்காத சோகம். அந்தச் சோகத்தை அனுபவித்த மக்கள் அனுப்பிய உணர்வின் பதிவுகளே 'கண்ணீர் மடல்கள்'.

இளகிய நெஞ்சுடையோர் இமைகள் நனையாமல் அந்த மடல்களை உள்வாங்க முடியாது. அந்த மடல்களிலிருந்து :

**அகிலா பசுபதி** : எல்லோர் வாழ்விலும் மரணம் வரும். ஆனால் நாம் மட்டும் மரணத்துக்குள் வாழ் கிறோம். வாழ்வை மரணத்துக்குள் தேடுகிறோம்... ஆயுதங்கள் மட்டு மல்ல. அமீபாக்களும், பாம்புகளும், பூரான்களும் எம்மீது அதிரடித் தாக்குதல் நடத்துகின்றன.

**எம்.எஸ். பேருப்பிள்ளை :** காட்டு வாழ்க்கை, காலைக் கடன் கழிக்கக் குந்துவதற்கும் இடமில்லை. காட்டு வாழ்க்கை கடினமாகத்தான் உள்ளது. ஆனாலும் சுதந்தரக் காற்றைச் சுவாசிப்பதற்கு, கொடுக்க வேண்டிய விலை இதுவென்றால், நான் காட்டு வாசியாகவே இருந்து விட்டுப் போகிறேன்.

**அங்கயற்கண்ணி** (வட தமிழீழம்): காடுகளுக்குள் காய்ச்சல், நெருப்புக் காய்ச்சல், செங்கண், மாரி... மலேரியா... இவைகளுக்கு நடுவே எங்கள் வாழ்க்கை நலமாய் இல்லை யென்று உலகத் தமிழருக்குச் சொல்லுங்கள். நாங்கள் படும் கஷ்டங்களை, ஒரு பிடி உணவுக்காக ஆளாய்ப் பறக்கும் எங்கள் மக்களின் பரிதவிப்பை எல்லோருக்கும் சொல்லுங்கள்.

**கோகுலன்** : நாங்கள் சுமந்த துன்பச் சுமையை உங்கள் தோள் அறியாது. அன்றடித்த எங்கள் இதயத் துடிப்பை காலங்கடந்து எவரும் கணக்கெடுக்க முடியாது. அகப்பட்டதை அள்ளிக் கொண்டு, ஆண்டாண்டு காலம் பற்றிப் படர்ந்த சொந்தத்தைப் பிரிந்தோம். வெள்ளம் ஓடி ஒரு குளத்தில் நிறைவது போல், வலிகாமம் ஓடி வந்து செம்மண்ணில் திரண்டது. எடுத்த கால் வைக்க இடமின்றி நின்றோம்; பின் ஊர்ந்தோம். இட்ட காலுக்கும் எடுத்த காலுக்கும் இடையில், இரண்டங்குல வெளியில் நாங்கள் நடந்தோம். 10 மைல் நீளம் பாம்பென நெளிந்தது சனத்திரளின் வரிசை. குழந்தைகள், மூப்படைந்தோர், அப்போதுதான் பூப்படைந்தோர் என எல்லோரும் அதே வரிசையில் அணிவகுத்திருந்தோம். முதியோர் சிலர் மூச்சைத் துறந்தனர். தரையில் கிடத்தி வந்தோம். சில குழந்தைகளைத் தூக்கிய போது பிள்ளையாகவும், கிடத்திய போது பிணமாகவும் இறக்கினோம். பத்து மணிக்கு நிலவு பட்டுப் போக, இருட்டில் எவருக்கும் எவரையும், தெரிய வில்லை. ஒரு கைக் கணக்கில் ஊர்ந்தோம். பாலுக்கு அழுதன வாய்கள். ,தனக்குள் அழுதது தாய்மை. ஊர் அழுத கண்ணீரால் உப்பேரி ஓர் அங்குலம் உயர்ந்து, தமிழீழம் நனைந்தது. கொட்டும் மழை, குதறும் குளிர், கும்மிருட்டு, கையில் சுமை, வயிற்றில் பசி... எனினும் நடந்தோம்.

மூன்று இரவு - இரண்டு பகல்.

**கயல் விழி** : இன்று எனக்கொரு முகவரி இல்லை. மனிதன் சொந்த வீடு வாசல்களை இழப்பதுதான் மிகப் பெரிய சோகம். அந்த சோகத்தை, எத்தனையோ லட்சக் கணக்கான ஈழமக்கள் இன்று அனுபவிக்கின்றனர். அவர்களில் நானும் ஒருத்தி.

ஒரு சமூகத்தையே புரட்டிப் போட்டு வேரோடு பிடுங்கி விட்ட வரலாறு இங்கு நடந்து முடிகிறது. எங்களின் எதிர்காலம் என்ன? உணவு மறுக்கப்பட்டு, கல்வி மறுக்கப்பட்டு - இவற்றின் எதிர்காலம் என்ன?

தமிழ் நெஞ்சங்களே! முடிந்தால் இந்தக் கண்ணீர் மடல்களை கேட்டுப் பாருங்கள். முதலில் கண்ணீர் வரும். பிறகு, கண்ணீரிலிருந்தும் தோட்டாக் கள் புறப்படும்.

**- சுபவீயின்**
**'என் நாட்குறிப்பிலிருந்து'**
எனும் நூலிலிருந்து

**(அக்டோபர் 10 தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு தமிழ் தமிழர் இயக்கத்தின் விருதுநகர் கிளை வெளியிட்ட துண்டறிக்கை)**



படிப்பகம்

www.padippakam.com

# 3 குறுக்கு விசாரணைக் கூண்டில் துக்ளக் 'சோ'-II

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**'சோ'** ராமசாமியைக் கூண்டிலேற்றிக் குறுக்கு விசாரணை செய்யும் வகையில் சென்ற இதழில் 23 கேள்விகள் கேட்டோம். நம் கேள்விகளுக்குச் 'சோ' ராமசாமியோ அவர் சார்பில் வேறொருவரோ சுருக்கமாக விடையளித்தால் 'தமிழ்த் தேச' ஏட்டில் வெளியிட அணியமாய் உள்ளோம். கேள்விகள் தொடர்கின்றன.

எங்கள் பகைவர் திரு 'சோ' அவர்களே!

24. பார்ப்பனர்களின் நாட்டுப்பற்றைக் காட்ட காங்கிரஸ் தலைமையில் இடம் பெற்றிருந்த பார்ப்பனத் தலைவர்களின் பெயரை எல்லாம் பட்டியலிடுகிறீர்கள். காங்கிரஸ் தலைமையில் எந்த அளவுக்குப் பார்ப்பன ஆதிக்கமும் பார்ப்பனியச் செல்வாக்கும் இருந்தன என்பதல்லாமல் இதிலிருந்து தெரிவது வேறென்ன? இந்த ஆதிக்கத்தை எதிர்ப்பதற்காகத்தானே பெரியார் காங்கிரசைக் கை கழுவினார்?

25. ராஜாஜி என்றழைக்கப்பட்ட ராஜகோபாலாச்சாரியார் சமூகநீதிப் போராட்டங்களில் முக்கியப் பங்கு வகித்தவர் என்கிறீர்கள். ஒவ்வொரு குழந்தையும் அரை நாள் பள்ளியிலேயே படித்தாலும் அரை நாள் தகப்பன் தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற குலக் கல்வித் திட்டத்தை ராஜாஜி கொண்டு வந்ததையும், காமராசரே அதை எதிர்த்ததையும் நீங்கள் மறைக்க முயல்வதேன்?

26. பாரதியாரை 'பிராமணர்' என்று சொல்லிப் பெருமைப் பட்டுக் கொள்கிறீர்கள். அதேபோது பிராமணர்களின் புரோகிதத் தொழிலையும் போற்றி மகிழ்கின்றீர்கள். பார்ப்பனர்களைப் பற்றி ''பேராசைக்காரனடா பார்ப்பான்'' என்றும், அவர்களின் புரோகிதத் தொழிலைப் பற்றி ''நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு'' என்றும் பாரதியார் பாடியதை உங்கள் 'துக்ளக்' ஏட்டில் எடுத்து வெளியிடுவீர்களா? ''பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே...'' என்று பார்ப்பனர்களையும், ''சூத்திரர்க்கொரு நீதி தண்டச் சோறுண்ணும் பார்ப்புக்கு ஒரு நீதி என்று சாத்திரம் சொல்லிடுமாகில் அது சாத்திரமல்ல சதியெனக் கண்டோம்'' என்று பார்ப்பனியத்தையும் அவர் சாடியதால்தானே, 'பாரதியார் பாட்டில் வெறுக்கத் தக்கன உள'' என்று 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி புலம்பினார்?

27. நாட்டு விடுதலைக்காகப் போராடிய பிராமணர்களின் பட்டியலில் நீங்கள் சேர்த்துள்ள வ.வே.சு. அய்யர்தான் சேரன்மாதேவியில் காங்கிரஸ் நிதியைக் கொண்டு நடத்திய குருகுலத்தில் பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனர் அல்லாதாருக்கும் இடையே பாகுபாடு காட்டியவர் என்பதும் அதை எதிர்த்துப் பெரியார் கிளர்ந்தெழுந்ததும் உங்களுக்குத் தெரியாதா?

28. நீங்கள் போற்றிப் புகழும் காங்கிரஸ் பிராமணர்களில் ஒருவரான சத்தியமூர்த்தி வெளிப்படையாகவே தேவதாசி முறையை ஆதரித்து வாதிட்டவர் என்பதை உங்களால் மறுக்க முடியுமா?



## தமிழ் குறித்துப் பேசத் தகுதியுண்டா?

29. தமிழ்த் தொண்டாற்றிய பிராமணர்கள் என்று பட்டியலிட்டு அதில் பரிதிமாற்கலைஞரையும் சேர்த்துள்ளீர்கள். சூரிய நாராயண சாஸ்திரியார்தான் தன் பெயரை இப்படித் தனித் தமிழில் மாற்றிக் கொண்டார் என்றும் பெருமைப்படுகிறீர்கள். தனித் தமிழைக் கிண்டலடிப் பதையே வாடிக்கையாகக் கொண்டுள்ள உங்களுக்குப் பரிதிமாற்கலைஞரின் பெயரை உச்சரிக்க அருகதை உண்டா? ஆங்கில மொழிச் செல்வாக்குக்கு எதிராகப் போராடியவர் பரிதிமாற்கலைஞர் என்கிறீர்கள். அய்ந்தாம் வகுப்பு முடிய தமிழ்வழிக் கல்வி என்பதைக் கூட மூர்க்கமாக எதிர்த்து ஆங்கில வழிக் கல்விக்கு வக்காலத்து வாங்கும் உங்களுக்குப் பரிதிமாற்கலைஞரைப் பற்றிப் பேசத் தகுதி உண்டா?

**நலங்கிள்ளி**



படிப்பகம்

www.padippakam.com

30.முற்போக்குப் பார்ப்பனர்களைத் திராவிடக் கட்சியினர் ஏற்கவில்லை என்கிறீர்கள். வ.ரா.வை 'அக்கிரகாரத்து அதிசய மனிதர்' என அண்ணா போற்றியது உங்களுக்குத் தெரியாதா? தமிழ்த் தொண்டாற்றிய விதிவிலக்கான பார்ப்பனர்களின் பெயரைச் சொல்லி நீங்களும் பார்ப்பனக் கூட்டமும் தமிழுக்குச் செய்து கொண்டிருக்கும் தீங்கை மறைக்க முயல்வதேன்?

31. இன்றுங்கூட பேராசிரியர்கள், வர்த்தகர்கள், இராணுவ வீரர்கள், தொழிலாளிகள் என்ற பிரிவுகள் இருப்பது கிட்டத்தட்ட பழைய வர்ண அமைப்புத்தானே என்கிறீர்கள். முழுக்க முழுக்கத் தொழில் அடிப்படையிலான வகைப் பிரிவுகளும் பிறப்பின் அடிப்படையில் தொழிலை வரையறுக்கும் வகைப் பிரிவுகளும் எப்படி ஒன்றாக முடியும்? இந்தியாவிலும், தமிழகத்திலும் இன்று வரையிலுங்கூட பிறப்பு அடிப்படையிலான வர்ண-சாதிக்கும் கல்வி அல்லது தொழிலுக்கும் நடைமுறைத் தொடர்பு அறுபடாமலிருப்பதை மறுக்க முடியுமா? சான்றாக, இந்தியத் தொழில்நுட்பவியல் கழகத்தில்



(ஐ.ஐ.டி.) மாணவர்களாகவும், பேராசிரியர்களாகவும் இருப்பவர்களில் 95 விழுக்காட்டினர் பார்ப்பனர்களாகவே அமைந்திருப்பது வெறும் தற்செயல்தானா? அல்லது, இதுவுங்கூட பார்ப்பனர்கள் தாங்க வேண்டியுள்ள சுமையே என்பீர்களா?

32. தமிழிசைக்காக கல்கி, பாபநாசம் சிவன் போன்றவர்கள் தொண்டாற்றியதாகப் பெருமைப்பட்டுக் கொள்கிறீர்கள். ஆனால் இன்றும் தெலுங்கிலும், சமஸ்கிருதத்திலும் மட்டுமே 'கீர்த்தனை' 'வர்ணம்' என்று ஆலாபனை செய்து கொண்டும் தமிழ்ப் பாடல்களைத் 'துக்கடா' என்று பாடிக் கொண்டும் இருப்பது நூற்றுக்கு நூறு பார்ப்பனர்கள்தான் என்பது உங்களுக்குத் தெரியாதா? அவர்களை நீங்கள் ஒரு வார்த்தை கண்டித்ததுண்டா? அல்லது மக்களுக்குத் தெரிந்த மொழியில், பாடச் சொன்ன பெரியாரைப் போற்றியதுண்டா? அல்லது தமிழிசைக்காகப் பாடுபடுகிறவர்கள் பார்ப்பனர்களாக இருந்தால் மட்டுமே பாராட்டுவீர்களா?

33. இராமனையும் கிருஷ்ணனையும் எடுத்துக்காட்டி, நமது தெய்வங்கள் எல்லாம் பிராமணர்களின் சிருஷ்டி என்றால், அவர்கள் ஏன் தெய்வங்களை பிராமணர்களாகவே கற்பித்து விடவில்லை?'' என்று கேட்கிறீர்கள். பார்ப்பனரால் படைக்கப்பட்ட தெய்வங்கள் பார்ப்பனியக் கருத்தியலுக்குத் துணையாகப் பாடுபட்டார்களா? இல்லையா? என்பதுதானே அடிப்படைக் கேள்வியாக இருக்க முடியும்? இராமனும் கிருஷ்ணனும் இத்தகைய தெய்வங்களே அல்லவா? அப்படியும் அவர்கள் சூத்திரர்களாகவோ பஞ்சமர்களாகவோ படைக்கப்படாதது ஏன்?

34. முருகன் வேடுவப் பெண்ணை மணந்ததைச் சொல்லி இந்து மதத்தின் சமூக நீதியை நிறுவ முயல்கிறீர்கள். முருகன் தமிழ்க் கடவுள் என்பது உங்களுக்குத் தெரியாதா? முருகனுக்கு இந்து மதத்துக்கும் என்ன தொடர்பு? வள்ளி என்ற பெயராவது வடநாட்டு இந்துக்களுக்குத் தெரியுமா?

35. பார்ப்பனரல்லாதார் உயர் பதவிகளுக்கு வந்த போது அதைப் பார்ப்பனர்கள் எதிர்க்கவில்லை என்று உங்கள் போக்குக்குச் சொல்லிச் செல்கிறீர்கள். காங்கிரசிலிருந்த பெரியார் பார்ப்பனரல்லாதாருக்கு வகுப்புரிமை கேட்ட போது பார்ப்பனர்கள் பிடிவாதமாக மறுத்து நின்றது உங்களுக்குத் தெரியாதா? கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் இட ஒதுக்கீடு கேட்கும் போதெல்லாம் அதனைப் பார்ப்பனர்கள் எதிர்த்து வருவதற்கு நீங்கள் தரும் விளக்கம் என்ன? மண்டல் பரிந்துரைச் செயலாக்கத்துக்கு எதிராக நீங்களும் உங்கள் பார்ப்பனக் கூட்டமும் நடத்திய கலகத்துக்கு நீங்கள் தரும் விளக்கம் என்ன? நீதித்துறையில் இட ஒதுக்கீடு கேட்ட போது கிண்டலும் கேலியுமாக சித்திரமும் தலையங்கமும் தீட்டினீர்களே, இதுதான் நீங்கள் பார்ப்பனரல்லாதாருக்குத் தெரிவிக்கும் ஆதரவா?

36. ஒரு பக்கம், தமிழ்வழிக் கல்வி என்றாலும், தமிழிசை என்றாலும் இட ஒதுக்கீடு என்றாலும், திராவிடக் கட்சியினர் செய்தால் பகடி பேசுகிறீர்கள். இவற்றையே பிராமணர்கள் செய்ததாகச் சொல்லி புளகாங்கிதமடைகிறீர்கள். இது முரண்பாடாக உங்களுக்குத் தெரியவில்லையா?

37. ஒரு பக்கம், எல்லோருக்கும் பூணூல் அணிவித்த இராமானுசரைக் காட்டி. இதோ எங்கள் புரட்சிகர பிராமணர் என எங்களுக்கு வேடிக்கை காட்டுகிறீர்கள். மறு பக்கம், பாரதி ஒரே ஒரு பஞ்சமனுக்கும் பூணூல் அணிவித்ததைப் பொறுக்க முடியாமல் கண்டித்த சந்திரசேகரரை 'ஜகத்குரு' எனத் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறீர்கள். இதில் எது உங்கள் முகம்?

38. கிறித்தவர்கள், இலத்தீனிலும் இசுலாமியர்கள் அரபு மொழியிலும் ஓதினாற்கூட அவர்கள் தமிழர்கள்; ஆனால் வடமொழியில் ஓதும் பிராமணர்கள் தமிழர்கள் இல்லையா? என்ன பிதற்றல் இது? எனப் புலம்புகிறீர்கள். கிறித்தவர்களின் இலத்தீனோ இசுலாமியர்களின் அரபோ தமிழை அழிக்கவோ, சிதைக்கவோ, அடிமைப்படுத்தவோ இல்லையே? ஆனால் உங்கள் வடமொழிதானே எங்கள் தமிழைத் தீட்டு மொழி எனச் சொல்லி, தமிழனின் திருமணச் சடங்கிலிருந்தும், இறை வழிபாட்டிலிருந்தும் கூட விரட்டியடித்து விலக்கியே வைத்துள்ளது?

39. கணினிக்குக் கூட வடமொழி ஏற்றது என



படிப்பகம்

www.padippakam.com

செர்மனியில் கருத்துத் தெரிவித்திருப்பதாகச் சொல்கிறீர்கள். இதற்கு அறிவியல் அடிப்படையிலான சான்று தர உங்களால் இயலுமா? தமிழ் அதற்குக் குறைந்ததா? கணினி வடமொழியை ஏற்றுக் கொள்வதற்கும் தமிழர் சமூக வாழ்வியலுக்கும் என்ன தொடர்பு? வடமொழியைக் காட்டிலும் வேறொன்று கணினிக்கு ஏற்புடையது என்றால் அதையும் புனித மொழி என தமிழர்களை ஏற்கச் சொல்வீர்களா?

40. ''தமிழ் மொழியை ஒழுங்காக உச்சரிக்கத் தெரியாதவர்கள் தமிழர்கள். ஆனால் தமிழை ஒழுங்காக உச்சரித்து வீட்டிலும் தமிழிலேயே பேசும் பிராமணர்களைத் தமிழர்கள் இல்லை எனச் சொல்வதா?'' எனக் கேட்டு கொதிப்படைகிறீர்கள். பல நூறு ஆண்டுகளாக எங்கள் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வியுரிமையை மறுத்து, அதை மொத்த குத்தகைக்கு எடுத்துக் கொண்ட நீங்கள் இன்று எங்கள் மக்களின் உச்சரிப்பைக் கேலி பேசத் துணிவது சாதித் திமிர் அல்லாமல் வேறென்ன? எங்கள் புஞ்சமர் ஒருவர் ஒழுங்காக வடமொழியை உச்சரிக்கக் கற்றுக் கொண்டாலும், உங்கள் சாதியினரும் இந்திய நீதித் துறையும் அவரைக் கோயில் கருவறையை நெருங்க விடாமல் தடுப்பது மட்டும் உங்கள் பார்வைக்கு நியாயமாகப்படுவது ஏன்?

41. ''தன்னைக் கன்னடியன் என்று வெளிப்படையாகக் கூறி, தமிழைக் காட்டுமிராண்டி பாஷை என்று தூற்றிய பெரியார் - தமிழ்த் தலைவர்; ஆனால் தமிழைக் கற்று, வீட்டிலே தமிழ் பேசி, அதைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள பிராமணன் தமிழன் அல்ல! இது வாதம் அல்ல - பிடிவாதம் கூட அல்ல - வெறும் மோசடி'' என்கிறீர்கள். தந்தை பெரியாரைத் தமிழர் தலைவர் என்று நாங்கள் சொல்வதே மோசடி வேலை என்று காட்டுவது உங்கள் நோக்கம். என்னே உங்கள் ஏரணம்! தொடர்பே இல்லாமல் பெரியார் வெவ்வேறு இடங்களில் கூறிய இரு செய்திகளை இணைத்து, அவர் கன்னடர் என்பதால்தான் தமிழைக் காட்டுமிராண்டி மொழி எனச் சொன்னார் என்பது போன்ற தோற்றத்தைக் கொடுக்கிறீர்களே, இதுவல்லவா கடைந்தெடுத்த மோசடித்தனம்? இதைப் பார்ப்பன சூழ்ச்சி என்றால் கோபம் வருவது ஏன்?

42. பிராமணப் புரோகிதர்கள் இருந்துதான் திருமணம் நடத்தப்பட்டாக வேண்டும் என்பதற்கு என்ன நிர்ப்பந்தம் என்கிறீர்கள். புரோகிதரல்லாத சுயமரியாதைத் திருமண முறை செல்லாது என முன்பெல்லாம் நீதிமன்றங்கள் தீர்ப்பளித்ததையும் 1969இல் அண்ணா சட்டமியற்றித்தான் இந்த அவலத்தை மாற்றினார் என்பதையும் உங்கள் வசதிக்கு மறந்து விட்டது ஏன்?

43. பகுத்தறிவுவாதிகள் சீர்திருத்தத் திருமணம் என்பது போல் சீர்திருத்தக் கருமாதி செய்து கொள்வதில்லையே ஏன், என்று குதர்க்கமான கேள்வி கேட்கிறீர்கள். எந்தச் சடங்கிலும் பார்ப்பனரைத் தவிருங்கள் எனப் பெரியார் சொல்லி வந்ததும், இன்றும் பல தமிழ்க் குடும்பங்களில் சாவின் போதும், வைதிகச் சடங்குகளைத் தவிர்த்து வருவதும், பெரியார் மறைந்த போது நடந்த இறுதி நிகழ்ச்சிகளே இதற்குப் பெரிய சான்று என்பதும் உங்களுக்குத் தெரியாமல் போனது ஏன்?

44. பார்ப்பனரல்லாத எந்தச் சாதியினரும் அர்ச்சகராக விரும்பாத போது மற்றவர்களும் ஏன் அர்ச்சகராகக் கூடாது என்று சொல்லி பகுத்தறிவுவாதிகள் கற்பனைத் தோற்றத்தை உருவாக்குவதாகச் சொல்கிறீர்கள். மக்கள் கலை இலக்கியக் கழகத் தொண்டர்கள் திருவரங்கம் கோயில் கருவறைக்குள் நுழைந்ததற்காக அவர்களைத் தண்டித்ததோடு, கோயில் தீட்டாகி விட்டதாகச் சொல்லி 'சம்ப்ரோட்சணம்' செய்தார்களே பார்ப்பனர்கள், அதை நீங்கள் கண்டித்ததுண்டா? உங்கள் சனநாயகத்தில் பெரும்பான்மை ஆதரவு பெற்ற தி.மு.க. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் உரிமையை நிலைநாட்ட முற்பட்டது. எப்படிப் பார்ப்பனரல்லாதாரின் விருப்பத்துக்கு மாறானது ஆகும்? உச்ச நீதிமன்றம் சென்று இந்த முயற்சியைத் தடுத்த பார்ப்பனக் கும்பலை நீங்கள் கண்டித்ததுண்டா?

45. முகலாயப் படையெடுப்பைச் சொல்லி இன்று முஸ்லீம்களைப் பழிவாங்க முடியாது என்னும் போது,



பகுத்தறிவுவாதிகள் பழைய ஆரியப் படையெடுப்பைக் காரணம் காட்டி இன்றைய பிராமணர்களை எதிர்ப்பது ஏன்? எனக் கேட்கிறீர்கள். 'கர சேவை' என்ற பெயரில் பாபர் மசூதியை இடிப்பதற்காக அத்வானி 'ரத யாத்திரை' சென்றது போல் பகுத்தறிவுவாதிகள் எந்த ஆரியச் சின்னத்தையாவது இடிக்க வேண்டும் என்று தேர்ப் பயணம் சென்றார்களா? அல்லது பார்ப்பனரல்லாதாருக்கு இட ஒதுக்கீடு கேட்பதைத் தான் பார்ப்பனர்களுக்கு எதிரான நடவடிக்கையாகக் கருதுகிறீர்களா? பார்ப்பனக் கூட்டம் மண்டலுக்கு எதிராகக் கமண்டலத்தைத் தூக்கியது, இந்தப் பார்வையின் அடிப்படையில்தானா?

46. 98 விழுக்காடு மதிப்பெண் பெற்றாலும் உயர் கல்வியில் இடமில்லாமல் தன்னல திராவிடக் கட்சியினர் பிராமணர்களை ஒதுக்குவதாகப் புலம்புகிறீர்கள்.

''ஏ பிராமணர்களே! பரம்பரைச் சிறப்பின் அடிப்படையில் பறையரை விட பிராமணருக்குக் கல்வித் தரம் அதிகமுண்டென்றால், பிராமணர்களின் கல்விக்கு இனிமேல் பணம் செலவிடாதீர்கள். எல்லாவற்றையும் பறையருக்காக செலவிடுங்கள்'' என்றாரே சுவாமி விவேகானந்தர். திராவிடக்



படிப்பகம்

www.padippakam.com

கட்சி சாயம் பூசாமல் இதற்கு எப்படி விடையளிக்கப் போகிறீர்கள், ராமசாமி?

47. ''... பல இடங்களிலிருந்தும் பிராமணர்களை விரட்டி விட்டதால் இந்தச் சமுதாயம் கண்டிருக்கும் உயர்வு என்ன? மருத்துவம் வியாபாரமாகியிருக்கிறது. நீதி விலை பேசப்படுகிறது; கல்வியின் தரம் தாழ்ந்து விட்டது; நிர்வாகத்திலோ ஊழல் பெருகி விட்டது. பிராமணர்கள் இருந்திருந்தால் இவை எல்லாம் சீராக இருந்திருக்கும் என்பதல்ல என் வாதம். ஆனால் பிராமணர்களை ஒதுக்கி விட்டதால் இவையெல்லாம் தூய்மையாகி விட்டனவா என்பதுதான் என் கேள்வி'' என்று வினாத் தொடுக்கிறீர்கள். பிராமணர்கள் 'விரட்டப்பட வேண்டிய அளவுக்கு விரட்டப்பட்டு விடவில்லை என்பது ஒருபுறம் இருக்கட்டும். உங்கள் வாதப்படியே எந்த சாதியினர் வந்தாலும் ஒன்றுதான் என்னும் போது- எல்லாச் சாதியினரும் எல்லாத் துறைகளிலும் தந்தமக்குரிய விகிதப் பங்கு பெறுவதில் உங்களுக்கு என்ன எரிச்சல்?

தெளிவாகக் கேட்கிறோம், பார்ப்பன ஒற்றைச் சாதி



பரிதிமாற்கலைஞர்

முற்றுரிமை உடைக்கப்பட்டு எல்லாச் சாதிகளுக்கும் சம வாய்ப்பு கொடுக்கும் முயற்சியை நீங்கள் எதிர்ப்பது ஏன்?

48. ''இன்றைய பிராமணனை எடுத்துக் கொண்டால் அவன் ஜாதி மோதல்களில் ஈடுபடுவதில்லை. தீண்டாமை போன்ற சாதிக் கொடுமைகளை அவன் வலியுறுத்துவ தில்லை'' என பார்ப்பனப் பெருமை பேசுகிறீர்கள். சங்கர மடத்தின் தீண்டாமை ஆதரவு நிலைப்பாட்டுக்கு என்ன சொல்லப் போகிறீர்கள்? சூத்திரனையும் பஞ்சமனையும் மோத விடுவதற்கு ஆவன அனைத்தையும் செய்து விட்டு, அந்த மோதலில் குளிர் காய்ந்து கொண்டே, 'எங்களுக்கு ஒன்றும் தெரியாது' என்று சாது வேடம் போட்டால் தமிழ் மக்கள் ஏமாந்து விடுவார்கள் என்பதுதானே உங்கள் கணக்கு? தீண்டாமை போன்ற சாதிக் கொடுமைகளை யார் செய்தாலும் எதிர்க்க வேண்டியதுதான்! அதே போது இந்தக் கொடுமைகளை நியாயப்படுத்தும் கருத்தியலின் மூலவர் களும், அதிலிருந்து மேலதிக நன்மை அடைபவர் களும் பார்ப்பனர்களே என்ற வரலாற்று உண்மையை உங்களால் மறுக்க முடியுமா? இன்றைய நிலையில் தீண்டாமைக் கொடுமைக்கு எதிரான 'தலித்' போராட்டங்களுக்கு உங்கள் 'துக்ளக்' ஏட்டில் விரற்கடையளவும் இடம் தரவில்லையே, ஏன்?

49. ''பிராமனிய எதிர்ப்பு என்கிற பெயரில் இந்நாட்டில் தொன்றுதொட்டு வருகிற கலாச்சாரத்தையும், பண்புகளையும் காலுக்கடியில் போட்டு மிதித்து, கண்மூடித்தனமான மேலை நாட்டு நாகரிகம் ஏற்கப்படுகிறதே - அது வெறுக்கத்தக்கது'' என புதுக் கரடி விடுகிறீர்கள். தமிழை ஒரு மொழிப் பாடமாகக் கூடப் படிக்காமல் ஆங்கிலமும், இந்தியும், பிரெஞ்சும் படித்து விட்டு, தமிழ் எழுதப் படிக்கக் கூடத் தெரியாத ஒரு பார்ப்பனத் தலைமுறையே உருவாகியுள்ளது உங்களுக்குத் தெரியுமா? நாள் தவறாமல் சிகாகோவுக்கும் நியூயார்க்குக்கும் கலிஃபோர்னியாவுக்கும் பறப்பதில் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கும் கூட்டம் எது? உங்கள் சுற்றத்தாரிடம் கேட்டுப் பார்ப்பீர்களா, சோ?

50. வெறுக்கத்தக்க பார்ப்பனியத்துக்கு நீங்கள் எடுத்துக் கட்டி வக்காலத்து வாங்கியிருப்பதால் வெறுக்கத்தக்க பார்ப்பனராக உங்களை நாங்கள் கருதுவதே சரி என்று மேலும் உறுதியாகி விட்டதை அறிவீர்களா? ■

## அடுத்த இதழில்...

தமிழ்த் தேசத்தில் தோழர் தியாகு எழுதிய கட்டுரையை மறுத்து புதிய ஜனநாயகம் 'சவடாலுக்கு மூல உத்தி; சந்தர்ப்பவாதமே தந்திர உத்தி - தமிழ்த் தேசத்தின் சதிராட்டம்' எனற தலைப்பில் வெளியிட்டுள்ள கட்டுரைகளுக்கான மறுப்பு அடுத்த இதழில் இடம்பெறும்.

டான் பிரீனின் - அயர்லாந்து விடுதலைக்கான எனது போராட்டம், படிப்பாளர் பக்கம், இயக்கச் செய்திகள் உள்ளிட்ட வழக்கமான கூறுகள் இட நெருக்கடி காரணமாய் இவ்விதழில் இடம்பெற முடியவில்லை.

யாவும் வழக்கம் போல் அடுத்த இதழில் தொடரும்

- ஆசிரியர்


## கணித் தமிழ்ச் சங்கம்

### தகவல் தொழில்நுட்பப் புத்தக மற்றும் தமிழ் மென்பொருள் கண்காட்சி

தமிழ் மென்பொருள் தயாரிப்பாளர்கள், பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் உறுப்பினராகக் கொண்டதே கணித் தமிழ்ச் சங்கம். இச்சங்கத்தின் கண்காட்சி விழா திசம்பர் 7, 8, 9 நாட்களில் சென்னை, அண்ணா சாலை, உமாபதி அரங்கில் (ஆனந்த் திரையரங்கம்) நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் தமிழில் தயாரிக்கப்பட்டுள்ள எழுத்துருக்கள், மின்னூல்கள், இணையத் தளங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், ஆத்திசூடி, பாரதியார் பாடல்கள் இடம்பெற உள்ளன.




படிப்பகம்

www.padippakam.com

# அம்பத்தூர் மக்கள் கோரிக்கை இயக்கம்

தமிழகத்தின் தலைநகர் சென்னையை ஒட்டியிருக்கும் அம்பத்தூர் நகரத்தில் இலட்சக்கணக்கான மக்கள் வசித்து வருகிறார்கள். இந்த நகராட்சிக்குட்பட்ட பகுதியில் மிகப் பெரிய தொழிற்பேட்டை இயங்கி வருகிறது. ஆனாலும், அம்பத்தூரில் அடிப்படை வசதிகளுக்கே திண்டாட்டம்தான்! நோயினாலும் விபத்தினாலும் மட்டுமல்ல, அருகில் அரசுப் பொது மருத்துவமனை இல்லாமற் போனதாலுங்கூட அடிக்கடி சாவுகள் நிகழ்கின்றன.

அம்பத்தூர் நகர மக்கள் சார்பில் பின்வரும் கோரிக்கைகளைத் தமிழ் தமிழர் இயக்கம் முன் வைத்துப் போராடி வருகிறது.

கோரிக்கைகள் இவைதான் :

1. நகராட்சிப் பகுதியில் ஓரிரு வட்டங்களுக்கு ஒன்று வீதம் தமிழக அரசின் பொறுப்பிலோ அம்பத்தூர் நகராட்சியின் பொறுப்பிலோ தொடக்கப் பள்ளிகள் நிறுவப்பட வேண்டும்.
2. அம்பத்தூர் நகரத்தில் இயங்கி வரும் அரசினர் பெண்கள் மேனிலைப் பள்ளியோடு கூட ஆண்களுக்கான மேனிலைப் பள்ளி வரும் கல்வியாண்டிலேயே தொடங்க வேண்டும்.
3. அம்பத்தூர் நகரத்தில் அரசு கலைக் கல்லூரி நிறுவப்பட வேண்டும்.
4. அம்பத்தூர் நகரமெங்கும் மலிந்து கிடக்கும் தனியார் ஆங்கில நர்சரி, மெட்ரிகுலேசன் பள்ளிகள் நடத்தும் கொள்ளையைத் தடுக்கும் விதத்தில் அந்தப் பள்ளிகள் வசூலிக்கும் கட்டணங்களை அரசு தலையிட்டுக் கட்டுப்படுத்த வேண்டும்.
5. அம்பத்தூர் நகரத்தில் உடனடியாக அனைத்து வசதிகளுடன் அரசுப் பொது மருத்துவமனை நிறுவப்பட வேண்டும்.
6. அம்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் எல்லாக் காலங்களிலும் போதிய அளவில் வழங்குவதற்கு அரசும் நகராட்சியும் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
7. அம்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்துக் குடியிருப்புகளிலும் முறையான சாலைகள் அமைத்திட வேண்டும்.
8. சென்னை - திருவள்ளூர் நெடுஞ்சாலையும், சென்னை - அரக்கோணம் இரயில் பாதையும் சந்திக்கும் இடத்தில் அடிக்கடி நிகழும் விபத்துகளைத் தவிர்க்கவும் மக்கள் பாதுகாப்புக் கருதியும் மேம்பாலமோ சுரங்கப் பாதையோ அமைத்திட வேண்டும்.
9. அம்பத்தூர் நகராட்சிப் பகுதியின் சுகாதாரச் சீர்கேட்டிற்குத் தீர்வு காணும் வகையில் நவீனமான பாதாளச் சாக்கடை முழுமையாக அமைக்கப்பட வேண்டும்.
10. பாதாளச் சாக்கடைத் திட்டம் என்ற பெயரில் இதற்காக வரியல்லாத வகையில் பணம் திரட்டும் முயற்சியை அரசும் நகராட்சியும் கைவிட வேண்டும்.
11. ஐந்நூறு குடும்பங்களுக்கு ஒரு நியாய விலைக்கடை திறக்கப்பட வேண்டும்.
12. எல்லாப் பகுதிகளிலும் தெரு விளக்கு அமைக்கப்பட வேண்டும்.
13. தெருக்கள் தோறும் குப்பைத் தொட்டிகள் அமைத்து நாள் தவறாமல் குப்பை அகற்ற வேண்டும்.
14. அம்பத்தூரில் ஒரு மின் சுடுகாடு அமைக்கப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளுக்காக அம்பத்தூர் நகரத்தில் தமிழ் தமிழர் இயக்கம் தொடர்ச்சியாகக் கிளர்ச்சிப் பரப்புரை செய்து வருகிறது. வீடு வீடாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்து, நிதி திரட்டுதல், சுவரெழுத்து, தட்டி விளம்பரம் என்று பல்வேறு வடிவங்களிலும் இந்த இயக்கத்தை முன்னெடுத்துச் செல்கிறது. இந்தப் போராட்டத்தின் ஒரு கட்டமாக சென்ற அக்டோபர் 12ஆம் நாள், அம்பத்தூர் பேருந்து நிலையப் பகுதியில் முழு நாள் அடையாளப் பட்டினிப் போராட்டம் நடைபெற்றது. பெண்கள் உட்பட சுமார் 50 பேர் இப்போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். இயக்கத்தின் கிளைச் செயலாளர் தோழர் பா. இரவிக்குமார் தலைமை வகித்தார். தலைமைக் குழு உறுப்பினர் தோழர் சிவ. காளிதாசன் முன்னிலை வகித்தார். பொதுச் செயலாளர் தோழர் தியாகு நிறைவுரையாற்றினார். மக்கள் கோரிக்கை இயக்கம் தொடர்கிறது.



படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்